# தமிழன்

THAMILAN தமிழன்

Follow us:

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 86 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 03ஆம் திகதி வியாழக்கிழமை (20.10.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் அவ்வல் - 23 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## கமெண்ட் கந்தர்...




## உஷ்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை வெள்ளவத்தையிலுள்ள சினிமா தியேட்டர் ஒன்றுக்கு சென்று பொன்னியின் செல்வன் திரைப்படத்தை பார்த்து ரசித்தாராம்...

"இந்தப் படத்தை பெரிய திரையில் வீட்டில் பார்ப்போம்" என்று அவரது குடும்ப உறுப்பினர்கள் கூறினாலும், "இல்லை தியேட்டரில் பார்ப்பது போல வராது" என்று கூறி தியேட்டர் சென்றாராம் மஹிந்த.

# நெருக்கடி தொடர்ந்தால் பல துறைகளுக்கு ஆபத்து!

- பிட்ச் ரேட்டிங்ஸ் எச்சரிக்கை
- இலங்கையின் பொருளாதார நிலை குறித்தும் கவலை

02 பக்கம்



# எஜமானின் இறுதிக் கிரியையில் கண்ணீர் சிந்தி துயருற்ற குரங்கு

09 பக்கம்



# ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அரசியல்மயம்

### அமைச்சர் அலி சப்ரி குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளதாக குற்றஞ்சுமத்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நல்லிணக்கம், பொறுப்புக் கூறலுக்கு உள்ளகப் பொறிமுறையே அவசியமென நாடாளுமன்றத்தில் நேற்று வலியுறுத்திக் கூறினார்.

02 பக்கம்

# சர்வதேசத்துக்கு மஹிந்த வழங்கிய உறுதிமொழியே கழுத்தை இறுக்குகிறது!

### கிரியெல்ல எம்.பி. சாட்டை

யுத்தம் நிறைவடைந்த பின்னர் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழியே இன்று கழுத்தை இறுக்குகிறது.

இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டுமென லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. சபையில் நேற்று தெரிவித்தார்.

02பக்கம்



# ரகுபதி சர்மா உள்ளிட்ட எட்டு கைதிகள் விடுதலை

### தீபாவளியை முன்னிட்டு நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்க ஜனாதிபதி தீர்மானம்

நல்லெண்ண அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகள் எண்மரை விடுவிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறிய முடிந்தது. அதனடிப்படையில் எதிர்வரும் தீபாவளி தினத்தன்று அரசியல் கைதிகள் விடுவிக்கப் படவுள்ளனர்.

02 பக்கம்

# பொருளாதாரத்தை முறையாக நிர்வகிக்க அரசாங்கம் தயார்

### ஜனாதிபதி விசேட அறிவிப்பு

கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முன்னெடுத்து, சரியான பொருளாதார முகாமைத்துவத்தை உருவாக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

வரிக் கொள்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று விசேட அறிக்கையொன்றை விடுத்து, இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வருமானத்தை அதிகரிக்காமல் பொருளாதாரத்தை பலப்படுத்த முடியாதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டை மீட்பதற்கு கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

02 பக்கம்

# கோட்டாவுக்கு அழைப்பாணை; நீதிமன்றம் அறிவித்தல்

### யாழில் சட்டத்தரணிகளுக்கு அறிவுறுத்து

•நா. தினுஷா

மனித உரிமை செயற்பாட்டாளர்களான லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோரை கடந்த 2011ஆம் ஆண்டு கடத்திச்சென்ற சம்பவம் தொடர்பில்...

02 பக்கம்

# அரசு வாக்குறுதிகளை உதாசீனம் செய்கிறது!



### சர்வதேச பொறிமுறை அவசியமென சார்ள்ஸ் எம்.பி. வலியுறுத்து

•எம். சுசிகலா

ரோசடிகளைத் தடுப்பதென்பது இலங்கை ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் சாதாரண விடயமல்ல. அது முடியுமான காரியமும் அல்ல.

02 பக்கம்

# அரசியல்வாதிகளின் தவறுகளுக்கு மக்களும் பொறுப்பேற்க வேண்டும்!

### கூறுகிறார் மஹிந்த தேசப்பிரிய



அரசியல்வாதிகள் தவறிழைக்கிறார்கள் என்பதற்காக புதிய அரசியல்வாதிகளை நியமிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் மாறாக புதிய சிந்தனையுடைய மக்களை உருவாக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

02 பக்கம்

# துப்பாக்கிச் சூட்டில் இளம் யுவதி பலி

### நெடுங்கேணியில் சம்பவம்

•வவுனியா செய்தியாளர்



வவுனியா நெடுங்கேணி சிவா நகர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு அடையாளம் தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் யுவதியொருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

02 பக்கம்

# திலினிக்கு விளக்கமறியல் நீடிப்பு

02 பக்கம்

# நிமலராஜனுக்கு யாழில் நினைவேந்தல் நிகழ்வு




02 பக்கம்

# பொலிஸாரின் அதிகார மீறல் குறித்து விசாரணை ஆரம்பம்

அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களிடம் அதிகாரத்தை மீறி செயற்பட்ட பொலிஸார் குறித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. போராட்டங்களை ஒடுக்குவதற்கு அதிகாரத்தை தவறான முறையில் பயன்படுத்தியமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இலங்கை இளம் சட்டத்தரணிகள் சங்கம், இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் ஆகியவற்றால் அளிக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு...

02 பக்கம்

# தேர்தலை காலந்தாழ்த்த சூழ்ச்சிசெய்யும் அரசு

### ஆணைக்குழுவுடனான சந்திப்பின் பின்னர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு

•நா.தினுஷா

உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கையை எண்ணாயிரத்திலிருந்து நான்காயிரமாக குறைப்பது குறித்து பேச்சுகள் எழுந்துள்ளன.

02 பக்கம்


நிலையான மற்றும் மொபைல்
ஆகிய இரு பெரும் ஆற்றல்களின் இணைப்பினால் தடையின்றி தொடரும் வணிக தீர்வுகள்



நிலையான மற்றும் மொபைல் ஆகிய இரு பெரும் ஆற்றல்களை ஒருங்கிணைத்து வழங்கும் இலங்கையின் ஒரே தொலைத் தொடர்பு நிறுவனம் நாமே. வணிக பைபர் (Business Fibre), ஒரே நோக்க-கட்டமைப்பு டேட்டா மையம் மற்றும் மல்டி-க்லவுட் (multi-cloud) என்பனவற்றை உள்ளடக்கி, உங்களின் வணிக ஆற்றலை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்திச் செல்லும் முதன்மையான தடையற்ற வணிகத் தீர்வுகள்.

0112 381 381
queries@enterprise.slt.lk
www.sltmobitel.lk

SLTMOBITEL ENTERPRISE

## பொருளாதாரத்தை முறையாக...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவாதம் கிடைக்காமல் போனால், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் மற்றும் உதவி வழங்குவதாக கூறும் நாடுகளிடமிருந்து எமக்கு உதவிகள் கிடைக்காமல் போய்விடும். அவ்வாறு நிகழ்ந்தால், மீண்டும் வரிசைகளில் காத்திருக்கும் யுகத்துக்கே நாம் செல்ல நேரிடும்.

இதைவிடவும் மிக கஷ்டமான காலத்தை எமக்கு எதிர்காலத்தில் சந்திக்க நேரிடும். இந்தக் கடன்களைப் பெற்றுக் கொண்டு, கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டும். இவற்றை நாம் விரும்பிச் செய்யவில்லை. விருப்பமில்லாவிட்டாலும் கூட சில விடயங்களை எமக்கு செய்ய நேரிடுகிறது. என்றாலும் அந்த முடிவுகளை நாம் அவ்வப்போது பரிசீலித்து வருகின்றோம்.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கும் அதேநேரம், பெரும்போகத்தில் மிகச் சிறந்த அறுவடையும் கிடைக்குமாக இருந்தால் அதன் மூலம் சிறந்த பொருளாதார நன்மைகளை ஈட்டிக்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்ல முடியும். அப்போது எமக்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதார அழுத்தம் குறைவடையும்.

அதேபோன்று நாம் வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரித்துக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளோம். இந்தச் செயற்பாடுகள் யாவற்றையும் முன்னெடுப்பதன் மூலம் எமக்கு முன்னோக்கிச் செல்லக்கூடியதாக இருக்கும்.

நாங்கள் தற்போது கடினமான காலகட்டத்திலேயே இருக்கிறோம். இதுபோன்ற கடினமான காலத்தில் நாம் கடினமான முடிவுகளையும் எடுக்க நேரிடும். வேறு யாரும் முன்வராத நிலையிலேயே நான் இந்த கடினமான பொறுப்பை ஏற்றிருக்கிறேன். எனவேதான் இது தொடர்பில் அனைவருக்கும் விளக்களிக்க வேண்டியது எனது கடமையென்பதை நான் உணர்ந்தேன். இது தொடர்பில் மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## பொலிஸாரின் அதிகார...

அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சட்டவிரோதமாக நிதி அல்லது சொத்துகளை கையகப்படுத்துவது மாத்திரமன்றி அதிகாரத்தை பக்கச்சார்பான முறையில் தனியொருவரின் அல்லது குழுவின் நலனுக்காக பயன்படுத்துதலும் ஊழலாகும் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துப்பாக்கிச் சூட்டில்...

சிவா நகர் பகுதியில் வசித்த துரைராஜசிங்கம் பிரமிளா என்ற 21 வயது யுவதி தனது வீட்டிற்கு வெளியில் வந்தபோது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் நெடுங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நிமலராஜனுக்கு யாழில்...

(யாழ். செய்தியாளர்)

யாழில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 22ம் ஆண்டு நினைவு தின நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (19) யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டன.

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், ஊடக அமையத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது மலர்மாலையை மூத்த ஊடகவியலாளர்களான கு.செல்வகுமார் மற்றும் த.வினோஜித் ஆகியோர் திருவுருவப்படத்திற்கு அணிவித்தனர்.

அதனை தொடர்ந்து, குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் கோமகன் சுடரேற்றியதை தொடர்ந்து, ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

போர்ச் சூழலில் யாழில் இருந்து, துணிவாக ஊடகப்பணியாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சியின் தமிழ் மற்றும் சிங்கள சேவை, வீரகேசரி, ராவய போன்ற ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.

அந்நிலையில் கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை இவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுததாரிகள், வீட்டின் யன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

அதன்போது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரை மீது வீழ்ந்தே உயிர் துறந்தார்.

கொலையாளிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு நிமலராஜனை படுகொலை செய்த பின்னர், வீட்டின் மீது கைக்குண்டு தாக்குதலையும் மேற்கொண்டனர்.

அதன்போது வீட்டில் இருந்த நிமலராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல்வாதிகளின்...

அரசியல்வாதிகள் இழைக்கும் தவறுகளுக்கு மக்களும் பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாணவர் நாடாளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நான் அறிந்த காலத்திலிருந்து, நாட்டிலிருக்கும் அரசியல் முறை தவறு. அரசியல்வாதிகள் தவறானவர்கள், வாக்குறுதிகளை நிறைவேற்றும் விடயத்தில் தவறிழைக்கிறார்கள் என ஒவ்வொரு தரப்பினரும் தொடர்ந்து வஞ்சித்து வருகிறார்கள்.

ஆனால், தேர்தலினூடாக மக்களே அந்த அரசியல்வாதிகளை தெரிவுசெய்கிறார்கள். நாட்டிலுள்ள அரசியல்வாதிகளிடமோ அல்லது நிர்வாகமுறையிலோ ஜனநாயக முறை இல்லை அல்லது நாட்டின் அபிவிருத்திப் பணிகள் இடம்பெறவில்லை என்றால் அதற்கு மக்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

வாக்கெடுப்பு நிலையங்களுக்கு நுழைதல், தாக்குதல் மேற்கொள்ளுதல், வாக்கு மோசடிகள் இடம்பெற்ற யுகமொன்றும் எமது நாட்டில் இருந்தது. அவ்வாறான காலப்பகுதியிருந்தே நாங்கள் வந்தோம்.

வாக்களிக்கும் உரிமையின் பெறுமதி மற்றும் வாக்காளர் பட்டியலில் பெயரிடுவதன் பெறுமதி போன்றவற்றை மக்கள் அறிந்திருக்காததால், இதுதொடர்பில் மக்களுக்கு கற்றுக்கொடுத்து அவர்களின் நிலப்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிலைப்பாடும் இருந்தது.

இருந்தபோதும், நாட்டிலுள்ள அரசியல்வாதிகள் தவறிழைக்கிறார்கள் என்றால் புதிய அரசியல்வாதிகளை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை பின்னரே புரிந்துகொண்டோம். அரசியல்வாதிகள் தவறிழைக்கிறார்கள் என்றால் அதற்கு மாற்றீடாக புதிய மக்கள் உருவாக வேண்டும்.

இது எனது கருத்து அல்ல. நீண்ட நாட்களுக்கு முன்னர் பேர்டல் பிரிஸ் என்ற அறிஞரே இந்த கருத்தை முன்வைத்திருந்தார்.

எனவே, நாம் புதிய நிலைப்பாடுகளை கொண்ட புதிய மக்களை உருவாக்க வேண்டும். அவ்வாறான புதிய மக்கள் பாடசாலைகளிலும், உயர் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களிலுமே இருக்கிறார்கள். எனவே, இந்த தரப்பினரிடம் புதிய சிந்தனைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

## திலினிக்கு...

நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள திலினி பிரியமாலி மற்றும் அவரின் வியாபார பங்காளியாக கருதப்படும் இசுரு பண்டார ஆகியோரை மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர்கள் இருவரும் எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுமார் 22 ரூபா மில்லியன் ரூபாவுக்கும் அதிகளவு நிதி மோசடி செய்தமை குறித்து வர்த்தகரொருவரினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் திலினி பிரியமாலி கடந்த 5ஆம் திகதி குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

திலினியினால் முன்னெடுக்கப்பட்ட நிதி மோசடி சம்பவங்கள் குறித்து, குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு இதுவரையில் 11 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தக செயற்பாடுகளின்போது, அவரின் பங்காளியாக செயற்பட்டதாக தெரிவித்து இசுரு பண்டார என்பவர் நேற்று முன்தினம் (17) கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் நேற்று (19) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையிலேயே இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## நெருக்கடி தொடர்ந்தால்...

நமது விசேட செய்தியாளர்

இலங்கையில் நிலவும் மோசமான பொருளாதார நெருக்கடி நிலைமை தொடருமானால் நுகர்பொருள் விற்பனை, மின் உற்பத்தி, கட்டுமானத்துறை ஆகியன கடுமையாக பாதிக்கப்படும் என பிட்ச் ரேட்டிங்ஸ் நேற்று (19) எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவின் கடன் தரப்படுத்தல் நிறுவனமான பிட்ச் ரேட்டிங்ஸ், இலங்கை எதிர்நோக்கியருக்கும் பொருளாதார பாதிப்பு குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பணவீக்கத்தின் அதிகரிப்பு, இறக்குமதி கட்டுப்பாடுகள், அதிக வட்டி வீதங்கள் ஆகியன எதிர்வரும் 12 முதல் 18 மாதங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என அவ்வமைப்பு எதிர்வுகூறியுள்ளது. பண வீக்கத்தின் அதிகரிப்பானது வருமான இழப்பை ஏற்படுத்தும் என்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் அன்றாட நடவடிக்கைகளுக்குத் தடையாக இருக்குமென்றும் வட்டி வீத அதிகரிப்பானது உள்நாட்டு பெரு நிறுவனங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துமெனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருட்களின் விலைகளின் அதிகரிப்பு, பண வீக்கத்தின் உச்ச நிலைமை ஆகியன மக்களுக்கு சவாலாக அமையும் என பிட்ச் ரேட்டிங்ஸ் தெரிவித்துள்ளது.

அடுத்த காலாண்டுகளில் இந்த நிலைமை தீவிரமாக பிரதிபலிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலைமை தொடருமானால் எதிர்வரும் 12 முதல் 18 மாத காலப்பகுதியில் 50 வீதமான வழங்குநர்கள் கடும் அழுத்தத்தை எதிர்கொள்வார்கள் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரகுபதி சர்மா உள்ளிட்ட...

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான கொலைக்குற்றச்சாட்டு தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள மோதரை காளிகோயில் குருக்கள் ரகுபதி சர்மா உட்பட எண்மர் விடுதலைசெய்யப்படவுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளான வரதராஜன், ரகுபதி சர்மா, இலங்கேஸ்வரன், நவதீபன், ராகுலன், காந்தன், சுதா, ஜெபநேசன் ஆகியோரே ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலைசெய்யப்படவுள்ளதாக அறிய முடிந்தது.

## அரசு வாக்குறுதிகளை...

ஏனென்றால், எந்த அரசாங்கமாக இருந்தாலும் ஆட்சிபீடத்தில், அதிகாரத்தில் இருப்பவர்கள் தான் அதிகமான மோசடிகளைச் செய்கின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை வாக்குறுதிகளை வழங்குவதும் அதனை உதாசீனம் செய்வதுமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்றத்தில் நேற்று (19) தெரிவித்தார்.

நாடாளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக்காலை ஆரம்பமானது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர் மோசடிகள் தடுத்தல் திருத்தச் சட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

இன்று வெளிநாட்டமைச்சர் ஐ.நா. மனித உரிமைப் பேரவையினுடைய நிலைப்பாடு தொடர்பாகவும் இலங்கை நிலைப்பாடு தொடர்பாகவும் அவர் தன்னுடைய கூற்றை முன்வைத்தார். ஐ.நா. மனித உரிமைப் பேரவை தற்போது நடைபெற்று முடிந்துள்ளது. அந்த கூட்டத் தொடரில் பரிந்துரையில் இருக்கின்ற விடயங்கள் தீர்மானத்தில் வருவதில்லை. 47 உறுப்பு நாடுகளைக் கொண்ட அந்த பேரவையில் 24 நாடுகளின் ஆதரவு வேண்டும். 24 நாடுகள் ஏற்றுக்கொள்கின்ற ஒரு விடயத்தைத் தான் அந்த பேரவையில் நிறைவேற்ற முடியும். ஆகவே, வடக்கு-கிழக்கில் மிகப் பிரதானமாக ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார்கள், 1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தனிச்சிங்கள சட்டம் மூலம் தான் இந்த நாடு பாதாளத்துக்குள் சென்றது. ஓர் இனம் அழிக்கப்பட்டது. அந்த இனம் உரிமைக்காக போராடியது. அதன் விளைவாக 2009ஆம் ஆண்டு சர்வதேசமே ஏற்றுக்கொள்ளாத இனப்படுகொலை இடம்பெற்றது.

அந்த இனப்படுகொலையை முழுமையாக விசாரிப்பதாக இருந்தால் சர்வதேச பொறிமுறையொன்றின் மூலமே அது முடியும். வெளிநாட்டமைச்சர் நாங்கள் அரசியல் யாப்புக்கு உட்பட்டு, எல்லா அரசியல் கட்சிகளும் இணைந்து அந்த பொறிமுறையை முன்னெடுக்க வேண்டுமென்றார். இது இலங்கையில் நடைபெற முடியாத காரியம். ஏனென்றால் தொடர்ச்சியாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை வாக்குறுதிகளை வழங்குவதும் அதனை உதாசீனம் செய்வதுமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகக் கூறினார்கள். அதற்கான முன்மொழிவுகள் நடைபெற்றன. ஆனால், நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆட்சியாளர்களால், அரசாங்கத்தால் முடியாமல் இருக்கிறது. ஆகவே, ஐ.நா. மனித உரிமைப் பேரவையினுடைய செயல்பாட்டினூடாக இலங்கைத் தமிழர்களுக்கு தீர்வு வருமென்று நான் முழுமையாக நம்பவில்லை. ஆனால் இங்கு உண்மையாக என்ன நடந்தது என்பதை உலகம் அறியவேண்டும். சொந்த நாட்டு மக்களையே கொன்றொழித்தார்கள் என்பதை உலகம் அறியவேண்டும். அது ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்படவேண்டுமென்றால் அது சர்வதேச பொறிமுறையினூடாகவே நடைபெறும். ஏனென்றால், யுத்தம் புரிந்தவர்களே அது குறித்த விசாரணைகளை நடத்துவார்களானால் அதற்கான நீதியான தீர்ப்பை வழங்குவார்களென்பது நடைபெறமுடியாத காரியம். ஆகவே, அவருடைய கூற்றுக்கு நான் இந்த ஆலோசனைகளை முன்வைக்கிறேன். தொடர்ச்சியாக மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகள் இலங்கையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்றால் அதுவும் இல்லை.

ஆனால், யுத்தம் நடந்த காலப்பகுதியில் நான் அதே பகுதியில் வாழ்ந்தவன். அங்கு என்ன நடைபெற்றது, சர்வதேச நிறுவனங்களைக் கொண்டு எவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றத என்பதை நான் அனுபவித்தவன். ஆகவே, இந்த குற்றங்களைப் புரிந்தவர்களுக்கு தண்டனை வழங்கவேண்டும் என்பதே பலருடைய கருத்து.

என்னைப் பொறுத்தவரையில் குற்றங்களைப் புரிந்தவர்கள் அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தண்டனை வழங்காமல் கூடப் போகலாம். ஆனால், உண்மையை மூடி மறைக்க முடியாது. அது என்றோ ஒருநாள் வெளிவரும். அதற்கு சர்வதேசப் பொறிமுறை வேண்டும். அதனைக் கொண்டுவர இலங்கையை பாதுகாப்பு கவுன்சிலுக்கு கொண்டுவர வேண்டும். ஆனால் இலங்கையின் பூகோள ரீதியான அமைவிடம் காரணமாக ஒரு சில வல்லரசு நாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் தேவையாக இருக்கின்றது. அதனால் அவ்வாறான வல்லரசு நாடுகளை மீறி இலங்கையை பாதுகாப்பு கவுன்சிலுக்கு கொண்டுவர முடியாதிருக்கிறது. எதிர்காலத்தில் அது மாறலாம் என்றார்.

## கோட்டாவுக்கு அழைப்பாணை...

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த வழக்கு விசாரணையின் போது சாட்சியாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அழைக்க வேண்டிய அவசியமில்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள உத்தரவை அதிகாரமற்றதாக்கக் கோரி முன்வைக்கப்பட்ட மனுவின் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மீண்டும் அழைப்பு விடுக்குமாறு உயர்நீதிமன்றத்தினால் மனுதாரர்கள் சார்பான சட்டத்தரணிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான காமினி அமரசேகர, யசந்த கோதாகொட மற்றும் ஏ.எச்.எம்.டி. நவாஸ் ஆகியோரின் தலைமையில் நேற்று (19) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, உயர் நீதிமன்றம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

இதன்போது, இந்த மனுவின் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாப ராஜபக்ஷவுக்கு நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்களின் தரப்பில் ஆஜராகியிருந்த சட்டதரணி நுவன் போபகே தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும், கோட்டாபய ராஜபக்ஷவின் சார்பில் சட்டதரணிகள் யாரும் ஆஜராகியிருக்கவில்லை.

அதற்கமைய, கோட்டாபயவுக்கு மீண்டும் அழைப்பு விடுக்குமாறு மனுதாரர்கள் சார்பில் ஆஜராகயிருந்த சட்டத்தரணிக்கு அறிவித்துள்ள உயர் நீதிமன்றம் இந்த மனு எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் காணமலாக்கப்பட்டமை தொடர்பில் அவர்களின் உறவினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் சாட்சியளிப்பதற்காக அப்போதைய பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றிய கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடந்த 2019ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி ஆஜராகுமாறு அழைப்பு விடுத்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

தனக்கு ஏற்பட்டிருக்கும் உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ்ப்பாணம் உயர் நீதிமன்றத்துக்கு சென்று சாட்சி வழங்க முடியாது என்றும், அதன் காரணமாக யாழ். நீதவான் நீதிமன்றத்தின் தீர்மானத்தை நிராகரிக்குமாறு உத்தரவிடுமாறும் கோரி கோட்டாபய ராஜபக்ஷவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதனை விசாரணைக்கு உட்படுத்திய மேன்முறையீட்டு நீதிமன்றம் அதன் முடிவை அறிவிக்கும்போது, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக கடமையாற்றி வருவதால் அவரை சாட்சியளிப்பதற்காக அழைக்க முடியாது என்று முடிவுசெய்திருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இந்த முடிவு சட்டத்துக்கு முரணானது என்றும் கோட்டாபய ராஜபக்ஷ தற்போது அந்த பதவியை இராஜினாமா செய்துள்ளதால் அவரை தற்போது சாட்சியளிக்க அழைப்பு விடுக்க முடியும் என்றும் உத்தரவிடுமாறு காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் உயர்நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீட்டு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## சர்வதேசத்துக்கு...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட புதிய பிரேரணை தொடர்பில் அமைச்சர் அலி சப்ரி விளக்கமளித்து உரையாற்றிய பின்னர் அதற்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியின் உரை குறித்து விவாதம் ஒன்றை நாம் கோருகிறோம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த ஆண்டை விட இவ்வாண்டு மிகக் குறைவான வாக்குகளே கிடைக்கப்பெற்றன. குறிப்பாக எந்தவொரு முஸ்லிம் நாடும் எமக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எமது நாடு குறித்த பிரச்சினையை உருவாக்கியவர் யார்?

யுத்தம் நிறைவடைந்த பின்னர் பான் கீ மூன் இலங்கைக்கு வருகை வந்தார். அவ்வேளையில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டியில் இருந்தார். பான் கீ மூனும் மஹிந்த ராஜபக்ஷவும் ஒன்றிணைந்த அறிக்கையொன்றை வெளியிட்டனர்.

இறுதிக்கட்ட யுத்த காலப்பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்கு மஹிந்த ராஜபக்ஷவே உறுதியளித்திருந்தார். அன்று அவர் அளித்த உறுதிப்பாடுதான் இன்று எங்கள் நாட்டின் கழுத்தை இறுக்கிக்கொண்டிருக்கிறது.

அன்று அவர் அளித்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. தற்காலிகமாக பிரச்சினையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக மஹிந்த ராஜபக்ஷ அவ்வாறு நடந்துகொண்டார். இது நாட்டைக் காட்டிக்கொடுத்த மேற்குலக ஒப்பந்தம் போன்றது. இது தொடர்பில் நாம் விவாதம் ஒன்றைக் கோருகிறோம் என்றார்.

இதேவேளை, அங்கு கருத்து வெளியிட்ட கபீர் ஹாசிம் எம்.பி.,

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையில் அடங்கியுள்ள விடயங்கள் குறித்துப் பேச வேண்டும். பொருளாதார குற்றங்கள் குறித்து கூறப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாக பயன்படுத்தியுள்ளமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் என்ற வகையில் இந்த விடயங்கள் குறித்து அபிப்பிராயத்தை தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் சர்வதேசத்தின் மத்தியில் நம்பிக்கையை இழக்க வேண்டி ஏற்படும். இந்த விடயங்கள் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பதை நாடாளுமன்றத்துக்கு அறிவியுங்கள்" என்றார்.

## ஐ.நா. மனித உரிமைகள்...

நாடாளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக் காலை ஆரம்பமானது. இதன்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் முன்வைக்கப்படுகின்ற நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் ஆகியவற்றை அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்துவதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். நாடு, கடந்த காலங்களில் பல்வேறு சவால்களிலிருந்து மீண்டு வந்திருக்கிறது.

நாட்டைப் பிளவுபடுத்தும் வகையிலான பயங்கரவாதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததுடன், கொரோனா தொற்றுப் பரவலையும் தடுத்து நிறுத்தினோம். பொருளாதார நெருக்கடியிலும் மனித அபிவிருத்தி தொடர்பில் நாம் அவதானத்தை செலுத்தி வருகிறோம்.

நாம் சர்வதேசத்துக்கு மீண்டும் மீண்டும் அளித்த வாக்குறுதியின்படியே செயற்பட விரும்புகிறோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டமும் அரசியலமைப்பில் ஏற்படுத்தப்படவுள்ள மாற்றங்களும் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தும் என்ற நம்பிக்கை உண்டு.

நல்லிணக்கம், பொறுப்புக் கூறலுக்கு உள்ளகப் பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது. எவ்வாறான நடைமுறையும் நாட்டின் அரசியலமைப்புக்கு உட்பட்டதாக இருக்கும் என்பதை நாம் வலியுறுத்தியுள்ளோம். உள்ளகப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென நான் கோருகிறேன். அவ்வாறான பொறிமுறையை நிறுவும்போது வெளிநபர்கள் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதை நாம் தவிர்த்துக் கொள்ள முடியும்.

உண்மையை கண்டறியும் பொறிமுறைக்காக நாம் சர்வதேசத்துக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியுள்ளது. இது தொடர்பில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் அழைத்துப் பேசுவதற்கு சபாநாயகர் அலுவலகம் தலைமை வகிக்க வேண்டுமென நான் கோரிக்கை விடுக்கிறேன். நாம் அனைவரும் இணைந்து பொறிமுறையை உருவாக்குவது அவசியமாகும். அதற்கான பேதங்களைத் தவிர்த்து வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் அணிதிரள வேண்டுமென விரும்புகிறோம் என்றார்.

## தேர்தலை காலந்தாழ்த்த...

இதனூடாக தேர்தலை காலந்தாழ்த்துவதற்கான சூழ்ச்சிகளை மேற்கொள்ள முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

தமது தனிப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காகவே நான்கு வருடம் ஆட்சியிலிருந்து விட்டு தேர்தல் நெருங்கும் நேரத்தில் இவ்வாறான புதிய திருத்தங்கள் மேற்கொள்ள முயற்சிப்பதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

தேர்தல் ஆணைக்குழு தலைவர் உள்ளிட்ட குழுவினரை சந்தித்து ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர் உள்ளூராட்சிமன்ற தேர்தல் குறித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தேர்தல் ஆணைக்குழுவை சந்தித்து உள்ளூராட்சிமன்ற தேர்தல் குறித்து கலந்துரையாடியிருந்தோம். தேர்தலை நடத்தும் அதிகாரம் கடந்த செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மக்களின் ஜனநாயக உரிமையை பாதுகாக்க வேண்டும் என்று சுயாதீனமாக கோரியுள்ளோம். இதேவேளை, உள்ளூராட்சிமன்றங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கையை எட்டாயிரத்திலிருந்து நான்காயிரமாக குறைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மறைமுக பொருள் தேர்தல் காலந்தாழ்த்த வேண்டும் என்ற நிலைப்பாடாகும்.

கடந்த நான்கரை வருடம் ஆட்சியில் இருந்தார்கள். இந்த காலப்பகுதியில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைத்து அதற்கான ஏற்பாடுகளை செய்திருக்க முடியும். எனவே, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அவருக்கு இருக்கும் அதிகாரத்துக்கமைய செயற்படுவார் என்று நம்புகிறோம்.

எது எவ்வாறாயினும் தேர்தலை சந்திக்க எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் தயாராக இருப்போம். அதேபோன்றும், தேர்தல் காலக் கட்டத்தில் சில எதிர்தரப்பு கட்சிகளே கூட்டணி அமைக்கும் என்றார்.

இந்த சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, நளின் பண்டார ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அரச நிதியை துஷ்பிரயோகம் செய்த அதிகாரிகள் அரசியல்வாதிகளிடமிருந்து இழக்கப்பட்ட நிதியை மீண்டும் அறவிடும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்!

## பொதுநிர்வாக சேவைகள் சங்கம் பரிந்துரை



அரசாங்க நிதியைத் துஷ்பிரயோகம் செய்த அதிகாரிகள், அவ்வாறு துஷ்பிரயோகம் செய்வதற்குத் தீர்மானம் எடுத்த அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளிடமிருந்து அரசாங்கத்துக்கு இழக்கப்பட்ட நிதியை மீண்டும் அறவிட்டுக்கொள்வதற்கும், அவர்களை சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு ஆற்றுப்படுத்தி தண்டனையைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு அதிகாரங்கள் விஸ்தரிக்கப்பட வேண்டும் என இலங்கை பொது நிர்வாக சேவைகள் சங்கம் பரிந்துரைத்துள்ளது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழு, அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (18) கூடியபோது இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டது. நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கை பொது நிர்வாக சேவைகள் சங்கத்தின் பிரதிநிதிகள் இதுபற்றிய கருத்துகளை முன்வைத்தனர்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறை தொடர்பான திருத்தம், அமைச்சரவை குறித்த திருத்தம், அரசாங்க சேவையை மறுசீரமைப்பது தொடர்பான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை இச்சங்கத்தின் பிரதிநிதிகள் முன்வைத்தனர்.

டிஜிட்டல்மயமாக்கல் மூலம் அரச சேவையை புதுப்பிப்பதற்கு தற்போதுள்ள சட்டத் தடைகளை நீக்குவதற்கு உரிய சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியதன் அவசியம் குறித்து உபகுழு விரிவாகக் கலந்துரையாடியதுடன், வினைத்திறனான அரச சேவையை உருவாக்குவதற்கு இது மிகவும் இன்றியமையாத காரணி என சங்கத்தின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அரச சேவையை புதுப்பித்தல் தொடர்பான குறுகியகால திருத்த முன்மொழிவுகளை இரண்டு வாரங்களுக்குள் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு உப குழுவின் தலைவர், இலங்கை பொது நிர்வாக சேவைகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

தேசிய பேரவையின் ஊடாக நாடாளுமன்றத்தில் திருத்தங்களை சமர்ப்பித்ததன் பின்னர் தேசிய கொள்கையொன்றை விரைவாக தயாரிக்க முடியும் என உப குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய கொள்கையொன்றிலிருந்து அரச சேவையை சீர்திருத்துவதன் ஊடாக மக்களுக்கு தேவையான சேவைகளை விரைவாகவும் அதிக வினைத்திறனுடனும் வழங்க முடியும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்டன் பெர்னாண்டோ மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஸ்ரீநிவாச தேரர் இயற்கை எய்தினார்



அநுராதபுரம் அட்டமஸ்தானாதிபதி, கலாநிதி பல்லேகம ஸ்ரீநிவாச தேரர் தமது 69ஆவது வயதில் இயற்கை எய்தியுள்ளார்.

கொழும்பு தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் தேரர் இயற்கை எய்தியுள்ளார்.

பல்லேகம ஸ்ரீநிவாச தேரர், வடக்கு மத்திய பிரிவிற்கான பிரதம சங்கநாயக்கராக பதவி வகித்தார்.

## களுத்துறையில் நீர்வெட்டு

களுத்துறை பிரதேசத்தில் நாளை வெள்ளிக்கிழமை (21) காலை 8.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை 12 மணித்தியாலங்களுக்கு நீர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்படுமென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, வாதுவ, வஸ்கடுவ, பொத்துப்பிட்டிய, களுத்துறை (வடக்கு/தெற்கு), நாகொட, பொம்புவல, பிலமினாவத்தை, பயாகல, மக்கொன, பேருவளை, அளுத்கம, தர்கா நகர், பெந்தர ஆகிய பகுதிகளுக்கு நீர் விநியோகம் தடைப்படவுள்ளது.

மின்சார சபை மற்றும் நீர் வழங்கல் சபையின் அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் காரணமாக நீர் விநியோகம் தடைப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

# அன்று சிங்களம் மட்டும். இன்று ஆங்கிலம் மட்டுமா?

### அமைச்சர் விஜேதாசவிடம் மனோ கேள்வி





1956 சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்ததை போன்று, இன்று ஆங்கிலம் மட்டும் சட்டம் கொண்டு வருகிறீர்களா? அதென்ன எதையெடுத்தாலும் "மட்டும்" என்கிறீர்கள்? என நேற்று நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவிடம் த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

சட்டக்கல்லூரி பரீட்சை ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்படுவது என்ற புதிய விதி பற்றிய சர்ச்சை நாடாளுமன்றத்தில் எழுந்தபோது அதில் தலையிட்டு மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது,

இலங்கையில் தமிழ், சிங்களம் இரண்டும் தேசிய மற்றும் ஆட்சி மொழிகள். ஆங்கிலம் இணைப்பு மொழியாகும்.

இந்த மூன்றில் விரும்பிய ஒரு மொழியில் பரீட்சை எழுத சட்டக்கல்லூரி மாணவர் அனுமதிக்கப்பட வேண்டும்.

ஆங்கிலம் அவசியந்தான். ஆனால், ஆங்கிலம் மட்டும் என்றால் அது கொழும்பிலுள்ள ஒரு வகுப்புக்கு மட்டுமே உதவிடும்.

# போதைக்கு அடிமையான இளைஞனை பொலிஸில் ஒப்படைத்த யாழ். தாயார்

போதைக்கு அடிமையான தனது 17 வயதான மகனை திருத்தி தருமாறு கோரி தாயொருவர் கோப்பாய் பொலிஸாரிடம் நேற்றைய தினம் புதன்கிழமை ஒப்படைத்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் வீட்டில் இருப்பதாகவும், அந்நிலையில் கடந்த 2 வருட காலமாக போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ளமையால், மகனை திருத்தி தருமாறு கோரி கோப்பாய் பொலிஸாரிடம் தாயார் ஒப்படைத்துள்ளார்.

குறித்த இளைஞனை இன்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட உள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.



அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தினால் கடந்த 15.10.2022. சனிக்கிழமை வெள்ளவத்தை லில்லி அவெனியுவிலுள்ள எம்.ஜ.சி.எச்சிலுள்ள மண்டபத்தில் சில உள்ளூராட்சி உறுப்பினர்கள் மற்றும் வாலிப முன்னணியின் நிர்வாக உறுப்பினர்களுக்கிடையிலான செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டது. இச்செயலமர்வில் உள்ளூராட்சி முறைமைகள், சமூகத்தில் உள்ளூராட்சி உறுப்பினர்கள் சமூக வகிபாகம், மீளாய்வும் முன்னெடுப்புகள் என்ற தலைப்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இச்செயலமர்வில் கொழும்பு முன்னாள் மேயர் ஒமர் காமில், முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் முன்னாள் தலைவர் என்.எம்.அமீன், முஹம்மது அஜிவதீன், தலைவர் லுக்மான் சஹாப்தீன், சாம் நவாஸ் ஆகியோரும் உரையாற்றினர். இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரும் கலந்துகொண்டார் (அஷ்ரப் ஏ சமத்)

# பேராசிரியர் பத்மநாதனின் ஆய்வு நூல்கள் வெளியீடு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் தகைசார், வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் பற்றிய மூன்று ஆய்வு நூல்களின் வெளியீட்டு விழா நேற்றைய தினம் புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத்துறை ஏற்பாட்டில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவில், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்துறை முன்னாள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வரலாற்றுத்துறை முன்னாள் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

தொடர்ந்து நூலாசிரியர் சி.பத்மநாதன் இந்து கற்கைகள் பீடத்தினரால் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

நூலாசிரியரும் பேராசிரியருமான சி.பத்மநாதனால் மூன்று நூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், நூலின் பிரதிகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, தமிழ்த்துறை முன்னாள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வரலாற்றுத்துறை முன்னாள் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர் த. சத்தியமூர்த்தி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

### கல்லீரல் அறுவை சிகிச்சைகள்

# வெற்றிகரமாக முன்னெடுப்பு

### மூன்று வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்டன



கொழும்பு, ராகம மற்றும் பேராதனை வைத்தியசாலைகளில் கடந்த 24 மணித்தியாலங்களில் மூன்று கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக பேராதனை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அர்ஜுன திலகரத்ன தெரிவித்தார்.

கடந்த ஆறு மாதங்களில் பேராதனை போதனா வைத்தியசாலையில் ஐந்து கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சைகள் வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கல்லீரல் சத்திரசிகிச்சைக்கு விசேட உபகரணங்கள் தேவைப்படுவதாகவும், பேராதனை வைத்தியசாலையில் தேவையான சகல உபகரணங்களும் நிபுணத்துவ வைத்தியர்கள் குழு உள்ளதாகவும் வைத்தியர் மேலும் தெரிவித்தார்.

இந்த கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சைகளை வெளிநாட்டில் செய்தால் சுமார் 30 அல்லது 40 மில்லியன் ரூபா செலவாகும் எனவும், இந்த சத்திரசிகிச்சைகளை இந்நாட்டில் செய்தாலும், இதற்காக அரசாங்கம் பெருமளவு பணத்தை செலவிடுவதாகவும் வைத்தியர் தெரிவித்துள்ளார்.

# தனிப்பட்ட வீடியோவை வெளியிடுவதாக தொழிலதிபரை மிரட்டிய யுவதி கைது!

### பயத்தினால் 10 இலட்சத்தை முன்கூட்டியே வழங்கிய வர்த்தகர்

தொழிலதிபர் ஒருவரை மிரட்டி அவரிடம் கப்பமாக பெருந்தொகையான பணம் கோரிய பெண் உள்ளிட்ட கும்பல் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த பெண்ணையும் அவருக்கு உதவி செய்த மற்றொருவரையும் கைதுசெய்துள்ளதாக களுத்துறை பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பேருவளை பகுதியைச் சேர்ந்த குறித்த தொழிலதிபர் செய்த முறைப்பாட்டையதையடுத்தே களுத்துறை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவர்களை கைதுசெய்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸ் விசாரணைகளின் மூலம் குறித்த தொழிலதிபர் வணிக நோக்கத்திற்காக இந்தியா சென்றிருந்தபோது மேற்படி பெண் அவரை சந்தித்து நட்பு கொண்டுள்ளாரென தெரியவந்துள்ளது.

பின்னர் இருவரும் இந்தியாவிலுள்ள ஒரு ஹோட்டலில் இரவைக் கழித்துள்ளனர், அவர்கள் நெருக்கமாக இருக்கும் வீடியோவை அந்த பெண் கைபேசியில் இரகசியமாக பதிவுசெய்துள்ளார். இருவரும் இந்த நாட்டிற்கு வந்தபிறகு அந்த பெண் தொழிலதிபரை தொடர்புகொண்டு குறித்த வீடியோவை காட்டியுள்ளார்.

70 இலட்சம் ரூபா பணம் தரவில்லை என்றால் வீடியோவை தொழிலதிபரின் மனைவிக்கு அனுப்புவதாக மிரட்டியுள்ளார்.

பயந்துபோன தொழிலதிபர், சந்தேக நபரின் கணக்கில் பத்து இலட்சம் ரூபா வரவு வைத்துள்ளார். எனினும், குறித்த பெண் சில நாட்களுக்குப் பிறகு மிகுதி 60 இலட்சத்தைக் கேட்டு மிரட்டியுள்ளார். இதையடுத்து தொழிலதிபர் பொலிஸாரிடம் முறைப்பாடு அளித்துள்ளார்.

பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கமைய பணத்தை பெற்றுக்கொள்வதற்காக களுத்துறைக்கு வருமாறு தொழிலதிபர் குறித்த பெண்ணை அழைத்துள்ளார். களுத்துறைக்கு வந்த பெண்ணை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.


சந்தேக நபரான குறித்த பெண்ணின் வயது முப்பத்திரண்டு எனவும், முறைப்பாட்டாளரின் வயது 52 எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.


## வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால் 100% வெற்றி நிச்சயம்." நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப் பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிலும் தோல்வி, தீராத நோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கு, விற்கப்படாத வீடு/காணி, வாகனம் விற்க, வெளிநாடு செல்ல,கொடுத்த பணம் திரும்பிவர, கணவன்-மனைவி பிரச்சினை, விவாகரத்தை தடுக்க, காதல், மனங்கவர்ந்தவரை வசமாக்கிக்கொள்ள, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலத் திற்குள் 100% நிரந்தரத்தீர்வு. இது சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர்-1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், மனோதத்துவ நிபுணர், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி -0710192687

eba jb . h t hh

பேருவளை, சீனன்கோட்டை சமகிபுர யாகூத்தியா சாவியா ஜும்ஆ மஸ்ஜிதில் வருடாந்த மீலாதுன் நபி மௌலித் மஜ்லிஸ் அண்மையில் நடைபெற்றது. பள்ளிவாசல் இமாம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மௌலவி தீன் முஹம்மத் (மஹ்ழரி) விசேட சொற்பொழிவாற்றினார். (படப்பிடிப்பு: பீ.எம்.முக்தார்)

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஒக்டோபர் 20ஆம் திகதி, வியாழக்கிழமை

# 22 ஆவது திருத்தம் வரும். ஆனால்?

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் கொழும்பு அரசியலில் பேசுபொருளாகியுள்ளது.

ஆளும் கட்சி - எதிர்க்கட்சித் தரப்புகளுக்கு உள்ளேயும் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கும் 22ஆவது அரசமைப்புத் திருத்த சட்டமூலம் இன்று நாடாளுமன்றுக்கு வருகின்றது.

இன்றும் நாளையும் அதன் மீது விவாதம் நடக்கும். முடிவில் வாக்கெடுப்பு. திருத்தத்திற்கு மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் - 150 எம்.பிக்கள் - ஆதரவளித்தால்தான் திருத்தம் அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இந்தத் திருத்தத்தை கொண்டு வரும் அரசு தரப்புக்குள்ளேயே இது தொடர்பில் இழுபறி, முரண்பாடு நீடிக்கின்றது.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் பொதுத் தேர்தல் போன்றவற்றில் நிற்க முடியாது என்ற பழைய 19ஆவது அரசமைப்புத் திருத்த ஏற்பாட்டை இந்த 22ஆவது திருத்தச் சட்ட மூலமும் கொண்டிருப்பதால், ஆளும் பொதுஜன பெரமுன கட்சியின் கணிசமான எம்.பிக்கள் இத்திருத்தத்தை ஆதரிக்க மறுக்கின்றனர்.

பெசில் ராஜபக்ஷ போன்ற இரட்டைப் பிரஜாவுரிமைப் பிரமுகர்களின் அரசியல் எதிர்காலத்தை இந்தத் திருத்தம் அடியோடு அடைத்து விடும் என்பதால் அரசுக்குள் பெசிலின் ஆதரவாளர்கள் இந்தத் திருத்தத்தை எதிர்க்கின்றனர்.

அமெரிக்காவில் தங்கியிருக்கும் பெசில் ராஜபக்ஷவே அங்கிருந்தபடி 22ஆவது திருத்தத்திற்கு எதிரான குழுவை அரசுக்குள் பலமாக இயக்குகின்றார் என்றும் கூறப்படுகின்றது. ஆளுந்தரப்பினர் பிகு பண்ணினால், எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு தேவையான மூன்றிலிரண்டு பங்கு எம்.பிக்களின் ஒத்துழைப்பைச் சுவீகரிக்கும் முயற்சியில் ரணில் தலைமையிலான அரசுத் தரப்பு ஈடுபட்டிருப்பதாக தெரிகின்றது.

சரியோ, பிழையோ இந்த 22ஆவது அரசமைப்புத் திருத்தம் ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரங்களை வெட்டிக் குறைக்கின்றது என்பது மட்டும் உண்மை. அது போதுமானதா, திருப்திகரமானதா என்பவற்றுக்கு அப்பால், அது ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டிக் குறைப்பதால், திருத்தத்தை எதிர்க்கட்சிகள் எக்காரணம் கொண்டும் எதிர்க்காமல் ஆதரித்தேயாக வேண்டும் என்ற கட்டாயக் கடப்பாடு உள்ளது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில்தான், இந்தத் திருத்தத்தை நிராகரிக்கிறோம், ஆதரிக்க மாட்டோம் என்று முன்னர் ஒரேயடியாக வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறிய எதிரணி, இப்போது இந்த 22ஆவது அரசமைப்புத் திருத்தப் பிரேரணையை ஆதரிப்பது குறித்து மீள்பரிசீரித்து முடிவெடுக்கத் தீர்மானித்துள்ளது.

இதற்காக எதிர்க்கட்சிகளின் ஒரு முக்கிய மந்திராலோசனைக் கூட்டத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று கொழும்பில் கூட்டினார். சில நியாயமான நிபந்தனைகளோடு அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை ஆதரிக்க எதிர்க்கட்சிகள் இணங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அப்படி நேர்ந்தால், ஆளும் கட்சியினரில் கணிசமானோரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இந்த அரசமைப்புத் திருத்தத்தை போதிய மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவுடன் நிறைவேற்றி, அந்த எதிர்ப்பாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் ஒரு பாடம் படிப்பிக்கக் கூடும்.

ஆனால், நேற்று மாலை நிலைவரப்படி இன்று நாடாளுமன்றில் மேற்படித் திருத்தம் சமர்ப்பிக்கப்படுமா என்பது சந்தேகம்தான். அப்படியே சமர்ப்பிக்கப்பட்டாலும் இரண்டு தினங்களில் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு செல்லுமா என்பது பெரும் சந்தேகம். இந்த விடயத்தில் பொதுஜன பெரமுன - ரணில் அரசின் சீத்துவக்கேடு ஓரிரு நாட்களுக்குள் தெரிந்துவிடும்.

# தார்மீக நியாயப்பாட்டை மீண்டும் பெறுதல் இன்றியமையாதது!



உலகின் கவனத்தை ஈர்த்தது மாத்திரமல்ல, ஜனாதிபதியை, பிரதமரை, அமைச்சரவையை பதவி விலகவும் வைத்த நான்கு மாத கால மக்கள் கிளர்ச்சியை கண்ட நாடு இலங்கை. இப்போது வெறுமனே மூன்று மாதங்கள் கடந்த நிலையில், குறிப்பிடத்தக்க அளவுக்கு தோற்றத்துக்கேனும் அமைதியானதாகவும் உறுதிப்பாடு கொண்டதாகவும் இருக்கிறது. அந்த மாற்றத்துக்கான பெருமை (அந்த சொல் பொருத்தமானதாக இருந்தால்) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே உரியதாகும். 'அரகலய' போராட்ட இயக்கத்தின் எழுச்சியின்போது அரசாங்கத்தில் உயர்மட்டங்களில் இருந்தவர்கள் அவருக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டியதற்குக் காரணம் இருக்கிறது.

மக்களின் சீற்றத்தைச் சந்திக்கவேண்டி வரும் என்ற பயத்தில் அவர்கள் தங்கள் மறைவிடங்களை விட்டு பல மாதங்களாக வெளியே வரமுடியாமல் இருந்தார்கள். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது மக்கள் இரவோடிரவாக தங்களது வருமானங்களினதும் சேமிப்புகளினதும் பெறுமதியில் அரைவாசியை அல்லது அதற்கும் கூடுதலானதை இழந்தார்கள். மறைந்திருந்த அரசியல்வாதிகள் மீண்டும் அரசாங்க அமைச்சர்களாக பதவிகளில் இருக்கிறார்கள். மீண்டும் அமைச்சர்களாவதற்கு காத்துக்கொண்டிருப்பவர்கள் பொறுமையை இழந்த நிலையில் காணப்படுகிறார்கள் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன.

மூன்று மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பின் மூலமாக நாட்டின் அதியுயர் பதவிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவானபோது நாட்டில் குழப்பகரமான ஒரு நிலையே காணப்பட்டது. முறைமை மாற்றமொன்றை வேண்டியும் ஜனாதிபதியையும் பிரதமரையும் முழு நாடாளுமன்றத்தையும் வீட்டுக்குப் போகுமாறு கோரியும் நாடுபூராவும் கிளர்ந்தெழுந்த மக்களினால் வீதிகளும் பொது இடங்களும் நிரம்பி வழிந்தன. தாங்கள் வீட்டுக்குப் போகுமாறு கேட்டவர்களுக்கு பதிலாக யார் அந்த இடத்தை நிரப்பவேண்டும் என்று அந்த மக்கள் சொல்லவில்லை. ஜனாதிபதியினதும் பிரதமரினதும் அலுவலகங்களும் வாசஸ்தலங்களும் முற்றுகையிடப்பட்டிருந்தன. போராட்ட இயக்கத்தின் அடுத்த இலக்காக நாடாளுமன்றம் இருந்தது.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்று வந்தபோது பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் தற்காப்பு நிலையில் இருந்தார்கள். ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் கீழான திடீர் மாற்றமே மக்கள் கிளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் பவியை விட்டு விலகிய முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை புதிய ஜனாதிபதியை பெரிதும் பாராட்ட வைத்தது. பிரதமர் பதவியில் இருந்து விலகிய பின்னர் முதற்தடவையாக கடந்த வாரம் ஆளும் கட்சியின் களுத்துறை பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோது ராஜபக்ஷ அந்த பாராட்டை தெரிவித்தார்.

ஜனாதிபதியாக விக்கிரமசிங்கவின் தெரிவு நிலைவரத்தில் உடனடி மாற்றத்தைக் கொண்டுவந்தது போராட்டங்களின் விளைவான குழப்பநிலையை இராணுவம் திணித்த ஒழுங்கு பதிலீடு செய்தது. சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்திய பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் போராட்டக்காரர்கள் மீது வன்முறையைப் பிரயோகித்து அவர்களை கைதுசெய்தனர். உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளிடம் இருந்தும், ஏன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடமிருந்தும் கடுமையான அக்கறைகளும் கண்டனங்களும் வெளிப்படுத்தப்பட்ட போதிலும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் பாதுகாப்புப் படைகள் போராட்டக்காரர்கள் மீது தொடர்ந்தும் வன்முறையை பிரயோகித்து கைதுசெய்துகொண்டேயிருக்கிறார்கள்.

அந்த அக்கறைகளும் கண்டனங்களும் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தியதாக தெரியவில்லை. ஆர்ப்பாட்டக் களத்துக்கு குழந்தையை கொண்டுவந்த தாயொருத்தி மீது பொலிஸார் நடத்திய தாக்குதலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குழந்தைகளை மனித கேடயங்களாக பயன்படுத்துகிறார்கள் என்று கூறி ஜனாதிபதி உட்பட அரசாங்கப் பேச்சாளர்கள் அந்த தாக்குதலை நியாயப்படுத்தியமையும் இன்று யாருடைய கை ஓங்கியிருக்கிறது என்பதற்கான அறிகுறியாகும்.

## அடக்குமுறையை நியாயப்படுத்தல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் அரசாங்க அதிகாரம் மீண்டும் முனைப்புடன் வெளிக்காட்டப்படுவதன் பின்னணியில் இரு காரணிகள் இருக்கின்றன. முதலாவதாக, நாட்டின் ஆட்சிமுறைக்கு முக்கியமானவையாக அரச கட்டடங்களை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த செயல் மூலமாக போராட்ட இயக்கம் கட்டுமீறிப் போயிருந்தது என்ற கருத்து நாட்டில் பரவலாக காணப்பட்டது. இந்த கட்டடங்கள் அமெரிக்காவிலும் ஐக்கிய இராச்சியத்திலும் வெள்ளை மாளிகை அல்லது பக்கிங்ஹாம் மாளிகை அதிகாரத்தின் மையங்களாக எவ்வாறு விளங்குகின்றனவோ அதே போன்றே இலங்கையில் அதிகாரத்தின் கோட்டைகளாக அல்லது காப்பரண்களாக விளங்குபவை. உதாரணமாக, அலரி மாளிகை இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து பிரதமர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக விளங்கிவருகிறது. அதற்கு மதிப்புக்குரிய வரலாறு ஒன்று உண்டு.

போராட்டக்காரர்கள் குதித்து நீச்சலடித்த தடாகத்தை கொண்டிருந்த ஜனாதிபதி மாளிகையில் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் ஆளுநர்கள் வசித்தார்கள். அது இராணி மாளிகை என்று அழைக்கப்பட்டது. ஆயுதம் தாங்கியவர்கள் என்பதற்காகவும் போரின்போது தியாகங்களைச் செய்தவர்கள் என்பதற்காகவும் பாரம்பரியமாக மதிக்கப்படுகின்ற பாதுகாப்புப் படைகளின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் மரியாதையில்லாத முறையில் போராட்டக்காரர்களில் சிலர் பேசியதை காண்பிக்கும் காணொளிகளை பலரும் மோசமான அத்துமீறலாக நோக்கினார்கள். தலைமைத்துவம் இல்லாததும் கட்டுப்பாட்டை மீறியதுமான போராட்ட இயக்கம் எங்குபோய் நிற்கும் என்ற கேள்வியும் எழுந்தது

இரண்டாவதாக, ஜனாதிபதி விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை, தனக்கு முன்னர் பதவியில் இருந்தவர்களைப் போன்று தனிப்பட்ட முறையில் சர்வதேச சமூகத்தின் அணுகுமுறைகளினால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றியோ அல்லது சர்வதேச குற்றங்களாக அமையக்கூடிய மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேச நீதிமன்றங்களுக்கு கொண்டுசெல்லப்படக்கூடிய அச்சுறுத்தல் பற்றியோ அவர் கவலைப் படுவதற்கு காரணமில்லை. முன்னர் பிரதமராக பதவி வகித்த காலகட்டங்களில் சமாதானம் மற்றும் நல்லிணக்க செயன்முறைகளில் ஒரு கடப்பாட்டை ஜனாதிபதி எப்போதும் காண்பித்தார்.

2001 - 2004 காலப்பகுதியில் பிரதமராக அவர் இருந்தபோது விடுதலைப் புலிகளுடன் நோர்வேயின் அனுசரணையுடனான போர்நிறுத்தம் மற்றும் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றார். 2015 - 2019 காலப்பகுதியில் பிரதமராக இருந்தபோது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்குவதற்கு அவர் தனது சம்மதத்தை தெரிவித்தார்.

இலங்கை அரசியலில் மிகப்பெரிய பரிசை ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொண்ட பிறகு கடந்த நான்கு மாதங்களாக அவர் நாட்டை அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நிலையுறுதிப்படுத்துவதற்கு பாடுபட்டுவருகின்றார். போராட்ட இயக்கத்தின் தலைவர்களை கைதுசெய்வதன் மூலமும் மக்கள் ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க பாதுகாப்புப் படைகளை பயன்படுத்துவதன் மூலமும் அந்த இயக்கத்தை அரசியல் ரீதியில் ஜனாதிபதி வலுவிழக்கச் செய்திருக்கிறார். அதன் விளைவாக, வெளித்தோற்றப்பாட்டை பொறுத்தவரை, போராட்ட இயக்கம் ( நாடு பூராவும் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்களை அணிதிரட்டக்கூடியதாக இருந்த நாட்களுடன் ஒப்பிடும்போது ) கடுமையாக சுருங்கிப்போயிருக்கிறது.

தற்போது அரசியல் கட்சிகளின் தீவிர ஆதரவாளர் குழுக்களும் பல்கலைக்கழக மாணவர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் மாத்திரமே பொது ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்க துணிந்து முன்வருகிறார்கள். பொலிஸார் சட்டவிரோதமானவை என்று கருதுகின்ற ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பதற்கு முன்னர் விவேகமுடைய எவரும் ஒன்றுக்கு இரு தடவைகள் சிந்தித்துப் பார்ப்பார் எனலாம்.

அடக்குமுறை மூலமாக அரசியல் சமுதாயத்தில் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதிலும் பார்க்க பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவது மிகவும் கூடுதல் சிக்கலானதாக இருக்கிறது. இதுவரையில் அரசாங்கம் உயர் பணவீக்கம், மறைமுக வரி அறவீடு மற்றும் மானியங்கள் குறைப்பு போன்ற வழிவகைகளின் ஊடாக மக்களிடம் இருந்து வளங்களை திசைதிருப்புவதில் கவனத்தைச் செலுத்திவந்திருக்கிறது. ரஜரட்டையில் சிறுநீரக நோயாளிகளுக்கு தேவையான மானிய அடிப்படையிலான மருந்தை பெறமுடியாமல் உள்ளது. மட்டக்களப்பில் மானிய அடிப்படையில் மொழிபெயர்ப்பாளருக்கான பயிற்சி வாபஸ் பெறப்பட்டுவிட்டது.

சிறுவர்கள் பாடசாலையை விட்டு விலகி கொழும்பில் கட்டட நிர்மாணப் பகுதிகளுக்கு வேலைக்கு செல்கிறார்கள். இத்தகைய போக்குகள் வறிய மக்களுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. அவர்களினால் போராட்டத்தையும் செய்யமுடியவில்லை. துன்பத்தை மௌனமாக ஏற்றுக்கொண்டு வாழ்க்கையை ஓட்டுவதற்கு திணறுகிறார்கள். இது உடனடியாக கண்ணுக்கு தெரியாத மனித அவலமாகும்.

வரி அறவீட்டை உயர்வருமானம் பெறும் மட்டங்களுக்கு விஸ்தரிக்குமாறு அரசாங்கத்துக்கு சர்வதேச நாணய நிதியம் கடுமையான நெருக்குதல் கொடுக்கிறது போன்று இப்போது தெரிகிறது. இந்த மட்டத்தினர் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு ஜனாதிபதிக்கும் அவரது அணிக்கும் வாய்ப்பைக் கொடுக்க இதுவரை முன்வந்தவர்கள். போராட்ட இயக்கத்தின் மீதான அரசாங்கத்தின் அடக்குமுறையையும் கூட இவர்கள் பெருமளவுக்கு ஆதரித்தவர்கள். ஆனால், நேரடி வரி அறவீட்டின் ஊடாக அவர்களிடமிருந்து வரிகளைப் பெறுவதற்கு (இது 36 சதவீதத்தை எட்டலாம்) அரசாங்கம் அண்மையில் செய்த அறிவிப்பு வர்த்தக மற்றும் துறைசார் நிபுணர்கள் குழுக்களிடமிருந்து எதிர்ப்பைக் கிளப்பியிருக்கிறது.

சர்வதேச தராதரங்களின் பிரகாரம் நோக்குகையில் 36 சதவீத நேரடி உயர் வரிவிதிப்பு ஒன்றும் வழமைக்கு மாறானதல்ல. இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கான அடிப்படைக் காரணங்களை ஜனாதிபதியும் அரசாங்கமும் கையாளவில்லை என்ற உணர்வே புதிய வரிக்கொள்கையை எதிர்ப்பவர்களின் சீற்றத்தின் அடிப்படையாகும். நேர்மையான வேலை மூலமாக ஒளிவு மறைவின்றி தங்களது ஜீவாதாரங்களை சம்பாதிப்பவர்கள் பெரிய வரிகளை செலுத்துமாறு கேட்கப்படுகிறார்கள்.

பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்ட நேரத்தில் அதிகாரப் பதவிகளில் இருந்தவர்களும் அந்த வீழ்ச்சிக்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாட்டைக் கொண்டவர்களும் மீண்டும் அரசாங்க உயர் பதவிகளுக்கு வந்திருப்பதே குறிப்பாக எரிச்சல் தருவதாக இருக்கிறது. அவர்கள் அப்போது ஒளிவுமறைவற்றவர்களாக இருக்கவில்லை. இப்போதும் அப்படியே. தாங்கள் இறுதியாக விட்ட இடத்தில் இருந்து தொடருவதில் முனைப்புக் காட்டுகிறார்களே தவிர, தங்களின் செயற்பாடுகளினால் நேர்ந்த அவலத்துக்காக பச்சாதாபப்படுபவர்களாக இல்லை.

எரிவாயு, நிலக்கரி மற்றும் பெற்றோல் போன்ற அத்தியாவசியப் பண்டங்களை கொள்வனவில் பாரிய ஊழல் தொடர்வதாக முறைப்பாடுகள் கிளம்பியிருக்கின்றன. முறைப்படி கேள்விப்பத்திரங்கள் கோரப்படாமல் தனி வட்டாரம் மூலமாக புதிய பாரிய உட்கட்டமைப்பு திட்டங்களும் முன்னெடுக்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது. வறியவர்களும் வர்த்தகத்துறையினரும் துறைசார் நிபுணர்களும் உட்பட பொதுவில் மக்களை தியாகம் செய்யுமாறு கேட்பதற்கு முன்னதாக அரசாங்கம் அதன் தார்மீக நியாயப்பாட்டை மீண்டும் பெறுவது இன்றியமையாததாகும். ஜனநாயக அரசியல் சமுதாயமொன்றில், தார்மீக நியாயப்பாடு என்பது போராட்டக்காரர்களை கைதுசெய்து அவர்களின் குரல்வளையை நெரிப்பதன் ஊடாக வருவதல்ல. தேர்தல்கள் மூலமாகவே வருகிறது.



கலாநிதி
ஜெகான் பெரேரா

## இன்றைய நாளில்...

- 1961 – சோவியத் ஒன்றியம் முதற்தடவையாக ஒரு நீர்மூழ்கிக் கப்பல் மூலம் ஏவும் நீண்ட தூரம் பாயும் ஏவுகணையை சோதனை செய்தது.
- 1973 – இரண்டாம் எலிசபெத் மகாராணி சிட்னி ஒப் பேரா மாளிகையைத் திறந்து வைத்தார்.
- 1982 – இலங்கையில் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. ஜே.ஆர்.ஜயவர்தன 52.1% வாக்குகள் பெற்று முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசுத் தலைவரானார்.
- 1991 – இந்தியாவின் உத்தரகாசியில் இடம்பெற்ற 6.8 அளவு நிலநடுக்கத்தில் ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.
- 1995 – கொழும்பு கொலன்னாவை பெற்றோலியக் கூட்டுத்தாபன எண்ணெய்த் தாங்கிகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் பெரும் சேதம் ஏற்பட்டது. இதன்போது 21 பேர் கொல்லப்பட்டனர்.
- 2001 – இலங்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கூட்டணிக் கட்சி தொடங்கப்பட்டது.
- 2011 – லிபிய உள்நாட்டுப் போர்: தேசிய இடைக் காலப் பேரவை போராளிகள் பதவியில் இருந்து அகற்றப்பட்ட அரசுத்தலைவர் முஅம்மர் அல் கதாஃபியை அவரது சொந்த நகரில் கைப்பற்றிப் படுகொலை செய்தனர்.

## நக்கல் நமசிவாயம்

நாட்டு நிலைமைகளைப் பார்த்து, முன்னமே தப்பி ஓடினது நல்லமெண்டு கோட்டா நினைச்சாலும் நினைப்பாரா இருக்கும்..!



# இன் Better Work வேலைத் திட்டத்தை ஆதரிக்கிறது !





வளங்களுக்கான நெறிமுறைக் கொள்கைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. பாலின சமத்துவம், பணியாளர் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றில் கட்டமைக்கப்பட்ட ஒரு நல்ல பணிச்சூழலை உறுதி செய்வதற்கான எமது உறுதிப்பாட்டை வலுப்படுத்த, உள்ளூர் மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடன் கூட்டுசேர்வதற்கான




இலங்கையின் ஆடைத் தொழில்துறையின் முன்னணி அமைப்பான கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF), ILOவின் Better Work வேலைத்திட்டத்திற்கு தனது முழு ஆதரவையும் தெரிவித்துள்ளது. ILO சமீப காலத்தில் தொழில்துறை பின்னடைவை வலுப்படுத்தவும், Better Work அனுபவங்கள், கருவிகள் மற்றும் கூட்டாண்மை மூலம் மனித வளங்களை மேம்படுத்தவும் Better Work (BW) அறிமுகப்படுத்தியது. ஆடைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர் சமூகத்திற்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை அடைவதில் இலங்கை ஏற்கனவே உயர் பங்களிப்பை வழங்கி வருவதுடன், இலங்கைக்கு ஏற்றவாறு இந்த BW வேலைத்திட்டம் ஆடைத் தொழில்துறை ஊழியர்களுக்கான நலன்புரி திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்குகிறது.

இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதியாளரான ஆடைத் தொழிலில் Better Work கவனம் செலுத்தியுள்ளது, இது நாடு முழுவதும் உள்ள 350 உற்பத்தி ஆலைகள் மூலம் சுமார் ஒரு மில்லியன் தொழிலாளர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை வழங்குகிறது. தொழில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம், பெண் தொழிலாளர்களுக்கு தலைமைத்துவத் திறன் பயிற்சித் திட்டங்கள் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்பாடு செய்தல் அத்துடன் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (SMEs) ஊக்குவித்து பாலின சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை மேம்படுத்துதல், அவர்களுக்கு தலைமைத்துவம், நிதி கல்வியறிவு பயிற்சி மற்றும் SME தொழிற்சாலை மேம்பாட்டு கருவிகள் வழங்குதல் ஆகியவற்றில் Better Work கவனம் செலுத்துகிறது.

ஆடைத் தொழில்துறை சர்வதேச அளவில் பெற்றுள்ள நம்பிக்கையும் நற்பெயரும் மனித ஒரு வாய்ப்பே Better Work என JAAF உறுதியாக நம்புகிறது.

இந்த முயற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்நிகழ்வில் கலந்துகொண்ட தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஆடைத்துறையில் ஏற்கனவே உயர்தரத்தை உருவாக்குவதற்கு சிறந்த OSH நடைமுறைகள் மற்றும் தரநிலைகளை ஊக்குவிப்பதில் இத்திட்டம் மற்றுமொரு முக்கியபடியாகப் பார்க்கப்படுகிறது. இது தொழில்துறையின் முக்கிய பங்குதாரர்களுக்கு ஆடைத் தொழிலுக்கான எமது அர்ப்பணிப்பை தெளிவாக நிரூபிக்கிறது என்று தெரிவித்தார்.

தொற்றுநோய் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலையின் ஆரம்பத்துடன், ஆடைத்தொழில் துறையானது தமது தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நலனை உறுதி செய்வதற்காக பரந்த அளவிலான திட்டங்களை செயல்படுத்தியது. ஊழியர்களின் குழந்தைகளுக்கு இலவச பாடசாலைப் புத்தகங்கள், மருத்துவ வசதிகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு சிறப்பு உணவுப் பொதிகளும் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களால் செயல்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் தங்கள் ஊழியர்களின் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான நலன்புரி நடவடிக்கைகளை செயல்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஜூன் 2022 நிலைவரப்படி, சுமார் 80% ஆடை உற்பத்தியாளர்கள் ஆண்டு சம்பள உயர்வுக்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளையும் உயர்த்தியுள்ளனர். இது 25% அதிகரிப்பதுடன், இந்த கொடுப்பனவு உயர்வு 2021 முதல் அமுலுக்கு வந்தமையும் சிறப்பம்சமாகும்.

# மகாவலி வலயத்தினுள் தமிழ்க் கிராமங்களை உள்வாங்கும் முயற்சி கைவிடப்பட்டது

## அமைச்சர் டக்ளஸின் எதிர்ப்பையடுத்து ஜனாதிபதி நடவடிக்கை



முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளை மகாவலி எல் வலயத்துடன் இணைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கடுமையான ஆட்சேபனையை தொடர்ந்து ஜனாதிபதியினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் கொக்குளாய், கொக்குத்தொடுவாய் போன்ற பிரதேசங்களை சேர்ந்த சுமார் 6 கிராமசேவகர் பிரிவுகளை மகாவலி எல் வலயத்துடன் இணைப்பதற்கு சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுமார் 70 வீதத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்கின்ற குறித்த கிராமசேவகர் பிரிவுகளை மகாவலி எல் வலயத்துடன் இணைப்பதற்கு எந்தவிதமான அவசியமும் இல்லை என்பதை தெளிவுபடுத்தியதுடன், இவவாறான செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தும் எனவும் எடுத்துரைத்தார்.

இந்நிலையில், குறித்த முயற்சிகள் நிறுத்தப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பான அறிவுறுத்தல்களையும் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் வழங்கல் முறைகேடுகளால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

## ரிஷாட் பதியுதீன் எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகள் குறைந்தாலும், மீனவச் சமூகத்தை பொறுத்தவரையில், எரிபொருள் வழங்கல் முறைகேடுகளினால் அவர்கள் பாரிய கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்றும் மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவினால் கொண்டுவரப்பட்டுள்ள பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக, நாடு எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்குமாயின் எமக்கு மகிழ்ச்சியே.

எனினும், மீனவர்களைப் பொறுத்தவரையில், பாரிய கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மன்னார் மாவட்டத்தில், வங்காலை பிரதேச மீனவர்களினால் மன்னார் அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு முன்னால் (18) பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் வழங்குதலில் பல முறைகேடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 340 ரூபாவுக்கு விற்கப்படுகின்ற மண்ணெண்ணெய், அங்குள்ள தனியார் விநியோகஸ்தர்களினால் 700 - 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதால் மீனவர்கள் பாரிய கஷ்டத்தை எதிர்கொள்கின்றனர். உத்தியோகபூர்வமாக அனுப்பப்படுகின்ற மண்ணெண்ணையை கூட மீனவர்களுக்கு வழங்காமல், வேறு சில வியாபாரிகளுக்கு வழங்கி, அவர்கள் அதை இரண்டாம் தரமாக விற்பனை செய்வதனால், அங்குள்ள மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மீனவர்களை அதிகமாகக் கொண்ட மன்னார் மாவட்டத்தில், மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் வழங்குதலில் பாரிய அநியாயம் இழைக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில், விசேட கவனத்தை செலுத்துமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

மேலும், அரசாங்க அதிபரும் இந்த



விடயத்தில் போதிய கவனம் செலுத்த வேண்டும். அத்துடன், அரசாங்க அதிபரின் தலைமையில் அதிகாரிகளை அனுப்பி, மன்னார் மாவட்ட மீனவ சங்கங்கள் மற்றும் அதன் பிரதிநிதிகளையும் அழைத்து, எரிபொருள் வழங்கலில் காணப்படுகின்ற முறைகேடுகளைக் கண்டறிந்து, அவசரமாக இந்தப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, நாட்டில் தற்போது நிலவும் மின்வெட்டு காரணமாக, எமது கைத்தொழில் துறையில் பாரிய நஷ்டத்தினை எதிர்கொள்ள நேரிடும். இது ஏற்றுமதியிலும் பாரிய நஷ்டத்தை தோற்றுவிக்கும். இந்த மின்வெட்டு நிலை தொடர்ந்தால், பல கைத்தொழிற்சாலைகள் இயங்க முடியாமல் மூட வேண்டிய நிலை ஏற்படும். தற்போது, நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இக்கட்டான பொருளாதார சூழ்நிலை காரணமாக, வட்டி, வரி வீதம் அதிகரித்துள்ளமையால், பல கைத்தொழிற்சாலைகளை மூடுவதற்கான ஆபத்துகள் தென்படுகின்றன.

இதனால் இலட்சக்கணக்கானோர் வேலைவாய்ப்புகளை இழக்க நேரிடும். எனவே, மின்வெட்டு விடயத்தை எளிதான விடயமாகக் கருதாமல், எதிர்காலத்தில் அதனை முற்றாக நிறுத்துவதற்கான அல்லது கைத்தொழிற்சாலைகள் போன்றவற்றுக்கு விசேடமான ஒரு திட்டத்தின் அடிப்படையில், எந்த நஷ்டமும் ஏற்படாதவாறு அவற்றை தடையின்றி இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அதேபோன்று, வரி விடயத்திலும் கைத்தொழிற்சாலைகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு, வியாபார அமைச்சும் எரிசக்தி அமைச்சும் இணைந்து விசேட திட்டம் ஒன்றை செயற்படுத்த வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கின்றேன்.

மேலும், வவுனியா மாவட்ட விவசாயிகளுடன் நாம் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தோம். எதிர்காலத்தில் விவசாயத்துக்கு தேவையான எரிபொருளை சரியான முறையில் வழங்குவதற்கான ஒரு திட்டத்தை விவசாயத் திணைக்களங்களின் ஊடாக செயற்படுத்த வேண்டும் என்று அவர்கள் வேண்டி நிற்கின்றனர். வவுனியா மட்டுமல்ல, அம்பாறை, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய அனைத்து மாவட்ட விவசாயிகளினதும் கோரிக்கையும் இதுவே. மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு நான் விஜயம் செய்திருந்த போது, அவர்கள் விசேட வேண்டுகோளாக இதனை முன்வைத்தனர்.

அதேபோன்று, வவுனியா மாவட்ட விவசாயிகள், அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றாக அழைத்து, அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை எம்மிடம் முன்வைத்தார்கள். 1970, 1977 ஆம் ஆண்டுகளில், இலங்கையின் மொத்த உழுந்து உற்பத்தியில், 40 வீதமான உழுந்தை வவுனியா மாவட்டம் மாத்திரம் வழங்கியிருக்கின்றது.

ஆனால், யுத்தத்திற்கு பின்னர், வன்னி மாவட்டம், அம்பாறை மாவட்டம் உள்ளிட்ட இன்னும் பல மாவட்டங்களில் இருந்த விவசாயக் காணிகளை எல்லாம் வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு கீழ் இரவோடிரவாக அரசாங்கம் வர்த்தமானிப்படுத்தியதால் தற்போது விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்றனர் என்று தெரிவித்தார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக் கோரி வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்








*(வவுனியா செய்தியாளர்)*

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியினரால் பயங்கரவாத தடைச்சட்டத்தினை உடன் நீக்கு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா பழைய பேருந்து நிலைய முன்றலில் நேற்று மு.ப. 10.30 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் வன்னி பிராந்தியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் "அரசே மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை முழுமைப்படுத்து, அரசே மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்து, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் - நில - வீட்டு உரிமையை உறுதிசெய், வானத்தில் வட்டமிடும் விலைவாசியை - மக்களுக்கு கிட்டவாக கொண்டு வா, வடக்கு - கிழக்கில் மத இனவாத நோக்கிலான தொல்பொருள் தேடுதல்களை உடனடியாக நிறுத்து" போன்ற பல்வேறு வாசகங்களை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## 19.10.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 114 5626 | 125 5225 |
| கனேடியன் டொலர் | 15 22 | 161 138 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 787 | 41 464 |
| யூரோ | 241 5044 | 256 4742 |
| ஜப்பான் யென் | 1 2877 | 1 4 00 |
| சிங்கப்பூர் டொலர் | 141 0 6 | 151 6367 |
| ஸ்ரேலிங் பவுன் | 3 5 6 45 | 311 4832 |
| சுவிஸ் பிரான்ங் | 248 3405 | 265 2 2 |
| ஐ.அ.டொலர் | 25 34 6 | 26 864 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 7 77 |
| குவைட் | குவைட் தினார் | 0,060 7800 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 6840 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 6706 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 6354 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 82 0 |

திகதி 18.10.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4912
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,723,080.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 4 4 3 8 0 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,929,160.00

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3154
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,204,260.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 03 26 30 45
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,108,327.60

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 1367
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,838,140.00
வெற்றி இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 3 4 9 5 8 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,438,971.60

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 942
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,196,940.00
வெற்றி இலக்கினம் H வெற்றி இலக்கங்கள் 18 37 40 42
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,226,520.80

**ராசி சுப பலன் Handahana**
சீட்டிழுப்பு இலக்கம்: 221
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,026,680.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 08 13 37 50 விசேட இலக்கினம் மேஷம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,797,735.40

**கோடி 27 + Mega POWER மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம் 1260
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,275,280.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 276,651,038.00
B 11 11 42 43 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011 4607000, 011 4607001 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# கண்டி அலதெனியவில் நாய் கவ்விக் கொண்டுவந்த பணப்பையில் தங்கச் சங்கிலி - 7000 ரூபா பணம்







(கண்டி நிருபர்)

வீட்டிலுள்ள வளர்ப்பு நாய் ஒன்று கவ்விக் கொண்டுவந்த சிறிய பணப்பை ஒன்றில் ஒரு இலட்ச ரூபாவிற்கும் அதிகமான பெறுமதி கொண்ட தங்கச் சங்கிலி ஒன்றும் 7000 ரூபா ரொக்கப்பணமும் இருந்துள்ளது. அதனை உரியவர்களிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று அண்மையில் (17) கண்டி அலதெனிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

அலதெனிய பொலிஸ் பிரிவிலுள்ள குருந்து கஹமட என்னுமிடத்தில் நடந்த இச்சம்பவத்தில் பணப்பை ஒன்றை நாய் ஒன்று கவ்விக்கொண்டு வந்துள்ளது. அது பாதை ஓரம் விழுந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மேற்படி வளர்ப்பு நாய் அடிக்கடி பாதணிகளை இவ்வாறு கவ்விக்கொண்டு வருமென உரிமையாளர் தெரிவித்தார். உரிமையாளர் நாய் கொண்டுவந்த மேற்படி பணப்பையை பரிசீலித்தபோது அதில் பணம் மற்றும் தங்கச் சங்கிலி என்பன காணப்பட்டுள்ளன.

மேலும், அந்தப் பையினுள் காணப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை எடுத்தபோது அது அக்கிராமத்தில் அயலிலுள்ள ஒருவர் என்றும் அவர்களது பணப்பை காணாமற்போன சம்பவமும் தெரியவந்துள்ளது.

பின்னர் அலதெனிய பொலிஸில் மேற்படி சம்பவம் தொடர்பாக முறைப்பாடு ஒன்றை பதிவுசெய்து பணத்தையும் தங்க நகையையும் மீள ஒப்படைத்துள்ளனர்.

# மரணச் சடங்கிற்கு வந்தவர் மரம் விழுந்து உயிரிழப்பு;

## கம்பளையில் சம்பவம்





(க.கிஷாந்தன்)

மாமாவின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்கு வந்திருந்த மருமகன், மரம் முறிந்து விழுந்து பலியான பெருந்துயர் சம்பவமொன்று கம்பளை, அட்டபாகை தோட்டத்தில் இடம் பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இரவு (18) சுமார் 10.45 மணியளவிலேயே இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது. கம்பளை - அட்டபாகை தோட்டத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் (வயது 76) என்பவர் இயற்கை மரணம் எய்திய நிலையில், அவருக்கான இறுதிக்கிரியைகள் நேற்று (19) இடம்பெற்றன. சடலம் அஞ்சலிக்காக அவரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே மரண வீட்டு வளாகத்தில் இருந்த மரம் மருமகன் மீது முறிந்து விழுந்ததில் அவர் உயிரிழந்துள்ளார். ரட்ணசாமி என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். அதேவேளை, அட்டபாகை தோட்டப் பகுதியில் பாடசாலை உட்பட மக்கள் நடமாடும் பகுதிகளில் முறிந்து விழக்கூடிய அபாயத்தில் பல மரங்கள் உள்ளன. எனவே, அவற்றை அகற்றி, தமது உயிரைப் பாதுகாக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தலவாக்கலை பாமஸ்டன் பாடசாலையில் தெரிவுசெய்யப்பட்ட 30 ஆசிரியர்கள் கௌரவிப்பு







(தலவாக்கலை நிருபர்)

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சங்கர் ராஜி நினைவு அறக்கட்டளையின் ஊடாக தலவாக்கலை பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 30 ஆசிரியர்கள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு தலவாக்கலை பாமஸ்டன் பாடசாலையில் இடம்பெற்றது. அன்றைய தினம் சங்கர் ராஜி நினைவு அறக்கட்டளையின் ஊடாக தலவாக்கலை பாமஸ்டன் பாடசாலைக்கு அன்பளிப்பாக கணினிகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சங்கர் ராஜி நினைவு அறக்கட்டளையின் செயலாளர் ஏ.கமலாநந்தன், அவரின் துணைவியார் திருமதி கமலாநந்தன், சட்டத்தரணி ஆதவன், சங்கர் ராஜி நினைவு அறக்கட்டளையின் மத்திய மாகாண அமைப்பாளர்கள் ராஜ்குமார், ஆமஸ்ரோங், ஆசிரிய ஆலோசகர் என்டன் இக்னோசியஸ், பாமஸ்டன் பாடசாலையின் அதிபர் பெரியநாயகம், கார்லிபேக் பாடசாலையின் அதிபர் சவரிமுத்து மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

# தீபாவளி தினத்தன்று மதுபான சாலைகளை மூடுக;

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் கோரிக்கை



(பதுளை நிருபர்)

தீபாவளி தினத்தன்று (24) நாட்டில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் பகுதிகளில் மதுபான வகைகள் விற்பனை செய்யும் நிலையங்களை மூடிவிடுமாறு, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் அனுப்பியுள்ள அவசரக் கடிதமொன்றிலேயே, அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

தொடர்ந்து அக்கடிதத்தில் "பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய பகுதிகளில் பெரும்பான்மையாக இந்திய வம்சாவளித் தமிழ்கள் வாழ்ந்துவருகின்றனர். ஆகையினால், அப்பகுதிகளிலும் நாட்டின் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் ஏனைய பகுதிகளிலும் மதுபான வகைகள் விற்பனை செய்யும் நிலையங்களை தீபாவளி தினத்தன்று (24) மூடிவிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், தீபாவளி தினமானது தமிழர்கள் ஆன்மீக ரீதியில் கொண்டாடும் புனித தினமாகுமென்பதையும், தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தனது ஆசிரியையின் படத்தை திரிபுபடுத்திப் பதிவிட்ட பிக்கு கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இணையத்தில் பாடம் கற்பித்த தனது ஆசிரியையின் படத்தை நிர்வாணமாக மாற்றி அதனைப் பதிவிட்ட பிக்குவை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய சூரியகந்த பிரதேச பௌத்த விகாரை ஒன்றின் 17 வயதுடைய இளம் பிக்கு ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி ஆசிரியை இணையத்தளத்தில் பிரத்தியேக கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் எனவும் இந்த இளம் பிக்கு இந்த ஆசிரியை மீது ஒருதலைக் காதல் கொண்டிருந்ததாகவும் இவ்விடயமாக இளம் பிக்கு வட்ஸ்அப் சமூகவலைத்தளம் ஊடாக அறிவித்திருந்ததாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# சிறுத்தையின் சடலம் மீட்பு



(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டப் பிரிவில் புகையிரத பாதைக்கு அருகாமையில் உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலம் ஒன்று நேற்று (19) மீட்கப்பட்டுள்ளதாக தோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து தலவாக்கலை பொலிஸாருக்கு தகவல் வழங்கவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். நன்கு வளர்ந்த சிறுத்தையே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

# கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தினால் எந்தப் பயனுமில்லை - யாழ். மாநகர முதல்வர்



''கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தினால் எந்தப் பயனும் இல்லை. எனவே, வட பகுதியில் போதைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிப்பதற்கு யாழ். நகருக்கு அண்மையில் புனர்வாழ்வு நிலையம் அமைக்க முயற்சி மேற்கொண்டு வருகின்றோம்'' - என யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

பெவ்ரல் அமைப்பின் மாற்றத்திற்கான பாதை கற்கைநெறியின் யாழ். மாவட்ட பெண்கள் குழு நடத்தும் "போதையினால் பாதை மாறும் இளையோரை நல்வழிப்படுத்தி நற்பிரஜைகளாக உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளிலான போதை ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் (18) திருநெல்வேலி முத்துதம்பி இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

குறித்த விழிப்புணர்வு செயற்பாட்டில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய பிரதேசமானது அச்சுறுத்தலையும் ஆபத்தினையும் எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றது. அண்மையில் வெளிவரும் பத்திரிகைச் செய்திகளில் அனைவரையும் கவலைக்குள்ளாக்குகின்ற - கலக்கத்தை உண்டாக்குகின்ற பயங்கரமான செய்திகளை படித்துக்கொண்டிருக்கின்றோம்.

ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகள் எவ்வாறு பாதிக்கப்படப் போகின்றார்கள் என்கின்ற அச்சத்தில் தங்களுடைய வாழ்நாளை கழிக்கின்றதோர் அவலநிலை தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது

பல்வேறு குற்றச்சாட்டுகள் சமூகத்தில் இருக்கக்கூடிய பெரியவர்களால் முன்வைக்கப்படுகின்றன. அதாவது போதைப்பொருள் வர்த்தகர்களின் பிரதான இலக்காக பாதிக்கப்படுபவராக இருப்பவர்கள் பாடசாலை மாணவர்களாகத்தான் இருக்கின்றார்கள். இந்த பாடசாலை மாணவ, மாணவிகளை இலக்குவைத்து இவ்வாறான போதைப்பொருள் விநியோகம் அண்மைக்காலங்களில் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. எதிர்கால சந்ததி எனக் கருதப்படுகின்ற எங்களுடைய இளைஞர், யுவதிகளை நோக்கி போதைப்பொருள் வர்த்தகம் மிக வேகமாக நடைபெற்று வருகின்றது. அதற்குள்ளே அறிந்தும் அறியாமலும் அதனுடைய எதிர்கால விளைவுகளை பற்றி தெரியாது எமது இளைஞர், யுவதிகள் இந்த போதைப்பொருளுக்குள்ளே அடிமையாகிக்கொண்டிருக்கின்றமை இந்த மண்ணில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது.

இதனை தடுத்துநிறுத்தவேண்டிய பாரிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. அதிலும் விசேடமாக அரசியல் தலைமைகள், சமூகமட்ட பிரதிநிதிகள், அத்தோடு பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் மற்றும் கல்விச் சமூகம் அனைவரதும் கடமையாகும்.

எதிர்காலத்தில் இந்த போதைப்பொருள் பாவனைக்குள்ளாகாதவாறு மாணவர்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் நாங்கள் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்

யாழ். மாநகர முதல்வர் என்ற ரீதியில் எதிர்காலத்தில் எவ்வாறான செயற்பாட்டினை முன்னெடுப்பது என்பது தொடர்பில் அனைத்து தரப்பினருடனும் இணைந்து போதைப்பொருளுக்கு எதிரான செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்து விரைவில் அந்த செயற்பாட்டினை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளேன். பல்கலைக்கழக மாணவர்கள், கல்விச் சமூகத்தினர் மற்றும் பொலிஸார் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து எவ்வாறு இந்த போதைப்பொருட்களிலிருந்து எமது மாணவ சமூகத்தைக் காப்பாற்ற முடியும் என்ற விடயத்தினை அறிந்து அதனை செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கையை விரைவில் முன்னெடுக்கவுள்ளோம்.

அத்தோடு போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கக்கூடிய விசேட நிலையம் ஒன்றினை யாழ். நகருக்கு அண்மையில் அமைப்பதற்கு யோசித்து வருகின்றோம் . கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தினால் பயனில்லை. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை சிறைச்சாலைக்கு அனுப்புவதன் மூலம் அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவதன் மூலம் அவர்களை சமூகத்தோடு ஒருங்கிணைக்க முடியும்

எனவே, வடக்கில் யாழ். நகருக்கு அண்மையில் ஓர் இடத்தில் புனர்நிலையம் ஒன்றினை அமைப்பதற்கும் நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். அதற்குரிய முயற்சியை எடுத்துவருகின்றேன். அனைவரின் ஒத்துழைப்புடன் அந்த விடயம் விரைவில் கைகூடும் - என்றார்.

# இந்தியாவில் தடைசெய்யப்பட்ட தொழில்நுட்ப முறைகள் இலங்கையின் வடபகுதியில் அமுல்





(யாழ். நிருபர்)

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட கடலட்டை தொழிலுக்கு இலங்கையின் வடபகுதியில் இந்திய முதலீட்டாளர்கள் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது கவலையளிக்கின்றது – என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (18) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கம் சுற்றுச்சூழலை கருத்திற்கொண்டு இந்தியாவில் கடலட்டை பிடிப்பதற்கும், வளர்ப்பதற்கும் தடை விதித்துள்ளது. ஆனால், கடந்த வாரம் மன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியிலுள்ள கடலட்டை உற்பத்திக் குஞ்சு நிலையத்தில் இந்திய முதலீட்டாளர்கள் தொழில்நுட்ப உதவிக்காக வருகை தந்துள்ளனர்.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட கடலட்டை தொழிலுக்கு இலங்கையின் வடபகுதியில் இந்திய முதலீட்டாளர்கள் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது கவலையளிக்கிறது.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட தொழில்நுட்ப முறைகளை இலங்கையின் வடபகுதியில் அமுல்படுத்துவதை வடபகுதி மீனவர்கள் விரும்பவில்லை.

இந்திய அரசு மற்றும் இந்திய துணைத் தூதரகம் என்பன இதனை கருத்திற்கொண்டு கடலட்டை சார்ந்த தொழில்நுட்பங்களை அமுல்படுத்துவதை தவிர்க்க வேண்டும் .

ஏனைய கடல்வாழ் உயிரினங்களின் வளர்ப்பு சார் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தலாம் - என்றார்.

# மன்னாரில் பஸ் மோதி வயோதிபர் உயிரிழப்பு

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலகம் அருகில் வீதியில் நின்றுகொண்டிருந்த வயோதிபர் மீது பஸ் மோதியதில் சாத்தான்குளம் பகுதியைச் சேர்ந்த 74 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் (18) மாலை இடம்பெற்றுள்ளது.

இப்பகுதியில் இடம்பெற்ற விபத்தின்போது பலத்த காயமடைந்த நிலையில், குறித்த வயோதிபர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்விபத்துச் சம்பவத்தை தொடர்ந்து பஸ் சாரதியும் நடத்துனரும் விபத்தின் பின்னர் அவ்விடத்தில் இருந்து தலைமறைவாகி விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் உயிரிழந்தவர்களின் உறவினர்களும், பிரதேச மக்களும் விபத்து இடம்பெற்ற இடத்தில் முரண்பட்டதால், விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸைக் கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

அதன் பின்னர் குறித்த பஸ் சம்பவ இடத்திலிருந்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக மன்னார் தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# அச்சுவேலியில் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் நேற்று முன்தினம் (18) 22 போதைமாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானப்படை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களின் அடிப்படையில் ஆவரங்கால் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரையும், அவரிடமிருந்து மீட்கப்பட்ட போதை மாத்திரைகளையும் மேலதிக நடவடிக்கைக்காக புலனாய்வுப் பிரிவினர் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# வல்வெட்டித்துறையில் முதியவர் மீது தாக்குதல்; தாக்குதலாளிகளில் ஒருவர் மடக்கிப்பிடிப்பு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பகுதியிலுள்ள வீடொன்றினுள் புகுந்த இருவர், வீட்டில் இருந்த முதியவர் மீது தாக்குதலை மேற்கொண்டதில் முதியவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் தேவமயில் முருகவேள் (வயது 65) எனும் முதியவரே படுகாயங்களுக்குள்ளான நிலையில் ஊறணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை, நாவலடி , ஊரிக்காடு பகுதியிலுள்ள வீடொன்றினுள் நேற்று (19) புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில், வாள் மற்றும் கோடாரியுடன் புகுந்த இருவர் வீட்டில் இருந்த முதியவர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான முதியவரின் அவலக்குரலை கேட்டு, அயலவர்கள் ஒன்றுகூடிய வேளை தாக்குதலாளிகள் வீட்டை விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடிய இருவரையும் அயலவர்கள் விரட்டியபோது, ஒருவர் அயலவர்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். இருந்தபோதிலும் மற்றையவர் தப்பியோடியுள்ளார்.

அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டவர் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நீர்வேலியில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் நேற்று முன்தினம் (18) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நீர்வேலி பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடொன்றில் தங்கி நின்று மேசன் வேலையில் ஈடுபட்டுவந்த விஜயபாகு நிதர்ஷன் (வயது 27) எனும் இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் கடந்த திங்கட்கிழமை இரவு உணவு அருந்திய பின்னர் உறங்க சென்றவர், அதிகாலை உயிரிழந்த நிலையில் காணப் பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட கைகலப்பில், இளைஞனின் உடலில் காயங்கள் ஏற்பட்டமையால் அவர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இறப்புச் சம்பவம் தொடர்பான உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் உரிய போசாக்குடன் கூடிய உணவுவேளையைப் பெறுவோரின் எண்ணிக்கை 20 வீதம் மாத்திரமே!









உரிய போசாக்குடன் கூடிய உணவு வேளையைப் பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை இந்நாட்டிலுள்ள சனத்தொகையில் 20 வீதம் மாத்திரம் என்றும், நாட்டிலுள்ள மக்களின் வருமானத்தில் 75 வீதம் உணவுக்கான செலவு என்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உபகுழுவில் தெரியவந்தது.

பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உபகுழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை (18) கூடியபோதே இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு, பசளைக்கான தேவை, அறுவடை வீழ்ச்சி, மந்தபோசனை நிலைமை மற்றும் இதனால் ஏற்படக்கூடிய சமூக விளைவுகள் தொடர்பில் துறைசார் நிபுணர்களின் கருத்துகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த உபகுழு கூட்டப்பட்டிருந்தது. கடன் மறுசீரமைப்பு மற்றும் நாட்டின் மருந்துப் பொருட்களின் பாவனை தொடர்பான நிபுணர்களின் கருத்துகள் இதற்கு முன்னர் இந்தக் குழுவினால் பெறப்பட்டிருந்தது.

விசேடமாக பதினாறு வருடங்களுக்கு முன்னர் நாட்டில் காணப்பட்ட மந்தபோசாக்கு நிலைமை தற்பொழுது நாட்டில் நிலவும் சூழ்நிலையினால் மீண்டும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதால், இதனைக் கட்டுப்படுத்த முன்னெடுக்க வேண்டிய குறுகியகால மற்றும் மத்தியகால நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

வருமானம் மற்றும் வீட்டுச் செலவீனம் தொடர்பான கணக்கெடுப்பை உடனடியாக நடத்துமாறு உபகுழுவின் தலைவர், நிதி அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்தார். இது தொடர்பான கணக்கெடுப்பு 2019ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடத்தப்படவில்லை யென்றும் அவர் சுட்டிக்காட்டினார். இந்தக் கணக்கெடுப்பின் ஊடாக தற்போதைய பொருளாதார நெருக்கடியின் மத்தியில் சமூகப் பெறுபேறுகள் பற்றிய துல்லியமான தகவல்களைப் பெற்று எதிர்கால வேலைத்திட்டங்களைத் தயாரிக்க உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வரி அதிகரிப்பு போன்ற செயற்பாடுகளின் மூலம் வருமானம் அதிகரிக்கப்பட்டாலும் தொழிற்சாலைகளை நடத்திச் செல்வதில் சிரமம், வேலைகள் இழக்கப்படும் ஆபத்து மற்றும் போசனை மட்டம் வீழ்ச்சியடைதல் போன்ற சமூகப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான ஆபத்து இருப்பதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், மனித வாழ்க்கையில் முதல் 8,000 நாட்களில் உரிய போசாக்கைப் பேணவேண்டியதன் அவசியம் மற்றும் சரியான பாதுகாப்புடன் கிடைக்கும் உணவைப் பயன்படுத்துவது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மருத்துவ சபையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர த சில்வா, போசாக்கு தொடர்பான பேராசிரியர் ரணில் ஜயவர்தன, நுண்கலைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரும், விவசாயம் தொடர்பான பேராசிரியருமான ரோஹண பி. மகாலியனாராச்சி, றுகுணு பல்கலைக்கழகத்தின் பயிர் விஞ்ஞானப் பிரிவின் பேராசிரியர் அநுர குமார, உணவு ஆணையாளர் உபுல் சாந்த அல்விஸ், உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் பட்டகொட மற்றும் தேசிய உர செயலகத்தின் பணிப்பாளர் சந்தன லொகுஹேவா கமகே, விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம், நிதி அமைச்சு மற்றும் திறைசேரி உள்ளிட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் பலரும் தமது கருத்துகளை இங்கு முன்வைத்தனர்.

இதில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநேசத்துரை சந்திரகாந்தன் மற்றும் எம்.ராமேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு அதிகரிப்பு

### இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தகவல்

மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் வர்த்தக அமைச்சு மற்றும் மகாபொல நிதியத்துடன் கலந்துரையாடப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்காக மகாபொல விசேட புலமைப்பரிசில் திட்டத்தினூடாக தற்போது மாதாந்தம் 5,500 ரூபா வழங்கப்படுகின்றது.

மகாபொல சாதாரண திட்டத்தினூடாக மாணவரொருவருக்கு மாதாந்தம் 5,000 ரூபா வழங்கப்படுவதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

பணவீக்கம் அதிகரித்துள்ள காரணத்தினால் இந்த கொடுப்பனவுகளை 50 வீதத்தால் அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். அதற்கமைய, எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் புலமைப்பரிசில் தொகையை அதிகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பத்திரிகை ஸ்தாபனத்தின் பயிற்சிநெறி கொழும்பில்

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின்(SLPI) ஏற்பாட்டில் CFLI மற்றும் MYTHOS LABSஇன் அனுசரணையில், "தவறான தகவல்களுக்கு எதிராவோம்" எனும் தலைப்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்தோருக்கான பயிற்சி நேற்று முன்தினம் (18) கொழும்பில் நடைபெற்றது.



கொழும்பு Cinnamon Lakeside ஹோட்டலில் நடைபெற்ற இந்த பயிற்சிப் பட்டறையில் கனேடிய உயர்ஸ்தானிகராலய பிரமுகர்கள், Mythos Labs மற்றும் CFLI ஆகிய அமைப்புகளின் அங்கத்தவர்கள் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஆண் மற்றும் பெண் ஊடகவியலாளர்கள், ஊடக துறைசார் மாணவர்கள் உட்பட 28 பேர் கலந்துகொண்டனர். அதேவேளை, சிங்கள மொழி மூலமான ஊடக நிகழ்ச்சியும் இந்த ஹோட்டலில் 30 பேருடன் நடைபெற்றது.

இலங்கையின் ஊடகங்களில் தவறான தகவல்கள் பரவுவது மற்றும் அதன் தாக்கம், தவறான தகவல்களை அடையாளம் கண்டு அதற்கு பதிலளிப்பது, தவறான தகவல்களை அறிக்கையிடுதல் மற்றும் தவறான தகவல் வலையமைப்புகளுக்கு முகங்கொடுத்து இணைய பாதுகாப்பை அதிகரிப்பது குறித்து இந்தச் செயலமர்வில் கலந்துரையாடப்பட்டது. நடைமுறைச் செயற்பாடுகளுடன் கூடிய இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பயிற்றுவிப்பாளராக விடிவெள்ளி பத்திரிகையின் ஆசிரியர் மொஹமட் பைரூஸ் இணைந்துகொண்டார்.

## தர்காநகர் பிரபல சமூகசேவையாளருக்கு விருது

**(பேருவளை பீ.எம்.முக்தார்)**

தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகரும் முன்னணி பிரபல சமூக சேவையாளருமான நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமுக்கு அமெரிக்கா தேசிய வணிக பல்கலைக்கழகத்தினால் (AMERICAN NATIONAL BUSINESS UNIVERSITY) கலாநிதி பட்டம் (DOCTOR DEGREE FOR SOCIAL SERVICES) வழங்கப்பட்டுள்ளது.



டுபாயிலுள்ள கிரவுன் பிளாஸா ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை (15) நடைபெற்ற நிகழ்வில் இவர் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்.

குவைத் அல்-நஜாத் செரிட்டி அமைப்பின் பணிப்பாளர் நாயகம் முஹம்மத் அல்-டூஸ் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

சமய, சமூக, பொது, கல்விப் பணிகளுக்காக நீண்டகாலம் சேவையாற்றும் பல நாடுகளையும் சேர்ந்த 12 பிரமுகர்கள் நிகழ்வில் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்க தேசிய வணிக பல்கலைக்கழக உயர் அதிகாரிகள் (American National Business University), டுபாயைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தர்காநகரைச் சேர்ந்த நஜீப் ஹாஜியார் 1999ஆம் ஆண்டுமுதல் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக களுத்துறை, காலி மாவட்டங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் கல்வி, சமய, ஆன்மீகப் பணிகளுக்காக அளப்பரிய சேவைகளைச் செய்து அதற்காக பாரியளவில் நிதியையும் செலவிட்டுள்ளார்.

அவரது 30 வருட கால பணிகளை பரிசீலனை செய்து அங்கீகரித்து மேற்படி பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியுள்ளது.

அமெரிக்காவிலுள்ள இந்த முன்னணி பல்கலைக்கழகத்தினால் இலங்கையைச் சேர்ந்த தர்காநகரைப் பிறப்பிடமாகக்கொண்ட நஜீப் ஹாஜியாருக்கு கலாநிதிப் பட்டம் கிடைத்துள்ளமை குறித்து இவ்வூர் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கலாநிதி பட்டம் பெற்று தமது சொந்த ஊர் திரும்பிவரும் அவரை வரவேற்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## ஜனாதிபதி அலுவலக சேதம்; மேலும் 9 பேர் கைது

**கோட்டை ஜனாதிபதி அலுவலகத்திற்கு அத்துமீறி நுழைந்து சேதப்படுத்திய குற்றச்சாட்டில் 9 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளதாக கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

**ஜூலை 9ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது சந்தேகநபர்கள் ஜனாதிபதி அலுவலகத்திற்கு அத்துமீறி நுழைந்து சொத்துகளை சேதப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது**

**கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

## கருத்து கந்தசாமி

**வறுமை காரணமாக நாட்டு மக்கள் இறைச்சி, மீன் வகைகளை சாப்பிடுவதை கைவிடுவதாக செய்தியொன்றினை பார்த்தேன்.**

**எங்கள் வீட்டில் அப்படியொரு நிலைமை இருந்தாலும் மற்றவர்களின் நிலை என்ன என்று அறிவதற்காக கிட்டத்தட்ட நாலைந்து பேரிடம் இதனை விசாரித்தேன். அவர்களும் இதனையே கூறினார்கள்.**

**அப்படியானால் இது பொதுவான நிலையாக மாறிவிட்டது என்பதை**



**உணரமுடிகிறது. நாட்டின் மக்கள் தொகையில் 20 வீதமானோர் மாத்திரமே சரியான ஊட்டச்சத்துள்ள உணவைப் பெறுவதாகவும், நாட்டின் வருமானத்தில் 75% உணவுக்காக செலவிடப்படுவதாகவும் தகவல்கள் சொல்கின்றன.**

**குழந்தைகள், சிறுவர்கள் நிலைதான் பாவம் !**





**மீலாதுன் நபி தின நிகழ்வு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் (ஒக்டோபர் 18) அவரது கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.**

# இலங்கையின் தலையெழுத்தை தீர்மானிக்கும் நாள் இன்று

(ஏ. அகீல் சிஹாப்)

2022ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியின் தலையெழுத்தை தீர்மானிக்கும் நாளாக இன்றைய நாள் அமைகிறது. இன்று நெதர்லாந்து அணியுடன் நடைபெறும் ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியைத் தழுவும் பட்சத்தில் உலகக்கிண்ணத் தொடரிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படும்.

ஆசியக்கிண்ணத் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற இலங்கை அணி, இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரின் சுப்பர் 12 சுற்றுக்கு இலகுவாக தகுதிபெறுமென அனைவரும் எண்ணியிருந்தனர். ஆனால், நமீபிய அணியுடனான முதல் ஆட்டத்தில் படுதோல்வியடைந்த இலங்கை அணிக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

எனினும், நேற்று முன்தினம் நெதர்லாந்து அணியை எதிர்கொண்ட இலங்கை அணி 79 ஓட்டங்களினால் அபார வெற்றிபெற்றதால் அடுத்த சுற்றுக்கான வாய்ப்பு நீடிக்கிறது. அந்த வகையில் இலங்கை அணியின் நெட் ரன்ரேட் நேர் பெறுமானத்தில் காணப்படுவதால் இன்றைய போட்டியில் வெற்றிபெற்றால் நேரடியாக அடுத்த சுற்றான சுப்பர் 12 சுற்றுக்குத் தகுதிபெறலாம்.

அதிலும் சிறந்த ரன்ரேட் பெறுமானத்தில் வெற்றிபெற்றால் 'ஏ' குழுவில் முதலிடம் பிடித்து சுப்பர் 12 சுற்றில் குழு 1இல் ஆஸி, இங்கிலாந்து, நியூசிலாந்து, ஆப்கான் அணிகளுடன் இணையலாம். நெதர்லாந்து அணியுடன் சாதாரண வெற்றியைப் பெற்றால் இந்தியா, பாக். அணிகளுடன் குழு 2இல் இணையலாம். நெதர்லாந்து அணியுடனான இன்றைய போட்டி இலங்கை நேரப்படி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது.







எங்கள் சிங்கங்களை வாழ்த்திட
நீங்களும் இணைந்துக்கொள்ளுங்கள்

QR குறியீட்டை Scan செய்து உங்கள் வாழ்த்துகளை பதிவு செய்யுங்கள்

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog
எதிர்காலம் இன்றே.


# உலகக்கிண்ணத்திலிருந்து வெளியேறிய பிரான்ஸ் நட்சத்திர வீரர்



பிரான்ஸின் உதைபந்தாட்டநட்சத்திர வீரரான என்கோலோ காண்டே, கட்டாரில் நடைபெறும் பீபா உலகக்கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறினார். தொடை தசையில் ஏற்பட்ட காயத்தில் அறுவை சிகிச்சைக்குப் பிறகு நான்கு மாதங்களுக்கு அவர் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் 14 அன்று டாட்டன்ஹாமுடன் செல்சி 2-2 என்ற கோல் கணக்கில் சமன் செய்ததிலிருந்து காண்டே தனது கிளப் அல்லது நாட்டுக்காக விளையாடவில்லை. காண்டே காயத்திலிருந்து திரும்பும் முயற்சியில் பின்னடைவை சந்தித்ததாக செல்சி மேலாளர் கிரஹாம் பாட்டர் கடந்த வாரம் கூறினார்.

உலகின் சிறந்த மத்திய கள வீரரான காண்டே, 2018இல் ரஷ்யாவில் நடந்த உலகக்கிண்ண பட்டத்தை பிரான்ஸ் வெல்வதற்கு முக்கிய பங்கு வகித்தார்.

# மதுசங்கவை அடுத்து சமீரவும் வெளியேறினார்



நடப்பு இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரிலிருந்து உபாதைக்குள்ளான இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளர் துஷ்மந்த சமீர நீக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு எதிரான போட்டியின்போது துஷ்மந்த சமீரவுக்கு உபாதை ஏற்பட்டுள்ளதன் காரணமாக அவர் உலகக்கிண்ணத் தொடரிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

குறித்த போட்டியில் தன்னுடைய கடைசிப் பந்தை வீசுவதற்கு தயாராகியபோது, துஷ்மந்த சமீர தனது கெண்டைக்கால் பகுதியில் உபாதை ஏற்பட்டதை அறிந்துகொண்டு, உடனடியாக மைதானத்திலிருந்து வெளியேறினார்.

குறிப்பிட்ட இந்த உபாதையின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஸ்கேன் பரிசோதனையில் துஷ்மந்த சமீரவின் கெண்டைக்கால் விரைவில் குணமடையாது என்பதால் அவர் உலகக்கிண்ணக் குழாத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சாளரான டில்ஷான் மதுசங்க உபாதை காரணமாக ஏற்கனவே வெளியேறியிருந்த நிலையில், தற்போது சமீரவும் வெளியேறியுள்ளார். இது இலங்கை அணிக்கு மிகப்பெரிய இழப்பாக கருதப்படுகிறது.

விளையாட்டு செய்திகள்

thamiliansports@gmail.com

# பலோன் டி ஓர் விருதை வென்ற பென்சிமா

நடப்பு ஆண்டுக்கான பலோன் டி ஓர் விருதை பிரான்ஸ் உதைபந்தாட்ட வீரர் கரிம் பென்சிமா வென்றார். இந்த விருதை வென்ற மூத்த வயது வீரர்களில் ஒருவராக அவர் உள்ளார். எதிர்வரும் டிசம்பர் மாதம் அவர் 35 வயதை நிறைவுசெய்ய உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சு இதழான பிரான்ஸ் புட்போல் கடந்த 1956 முதல் இந்த விருதை சிறந்த வீரர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. விருதுக்கு பரிந்துரைக்கப்படும் வீரர்களிலிருந்து சிறந்த வீரர் வாக்கெடுப்பு மூலம் தெரிவுசெய்யப்படுகிறார். அதிகபட்சமாக மெஸ்ஸி இந்த விருதை 7 முறை வென்றுள்ளார். ரொனால்டோ 20 முறை இந்த விருதை வெல்வதற்கான பரிந்துரையில் இடம் பெற்றுள்ளார். அவர் 5 முறை இந்த விருதை வென்றுள்ளார்.

நடப்பாண்டுக்கான விருதை வெல்லும் வீரர்களுக்கான பரிந்துரை பட்டியலில் ஆடவர் பிரிவில் மொத்தம் 30 வீரர்கள் பரிந்துரைக்கப்பட்டு இருந்தனர். அதில் பென்சிமா, லெவோண்டஸ்கி, கெவின் டி ப்ரூய்ன், முகமது சாலா ஆகிய வீரர்கள் விருதை வெல்லும் பேவரைட் வரிசையில் இருந்தனர். எதிர்பார்த்ததைப் போலவே பென்சிமா விருதை வென்றுள்ளார்.



இந்த விருதை வெல்ல வேண்டுமென்ற எண்ணம் எனக்குள் எப்போதும் இருந்ததுண்டு. ஆனால், 30 வயதைக் கடந்த பிறகு அது இலட்சியமாக மாறியது. அதை எனது தலைக்குள் ஏற்றிக் கொண்டேன். நான் சொல்லும் இலட்சியம் கடினமாக உழைப்பது. எனது அணிக்குத் தலைவனாக இருப்பதிலும், ரியல் மாட்ரிட் அணியில் விளையாடுவதும் நான் பெற்ற பாக்கியம். கடினமான தருணங்களைக் கடந்து வந்துள்ளேன்.

என்னோடு கிளப் அணியில் விளையாடும் வீரர்கள், அவர்களது நாட்டுக்காகவும் விளையாடி வந்தனர். ஆனால், நானோ அந்நேரத்தில் கிளப் மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டு வந்தேன். களத்தில் எனது உழைப்பை எண்ணி மகிழ்கிறேன், பெருமை கொள்கிறேன் என விருதை பெற்றுக் கொண்ட பென்சிமா தெரிவித்திருந்தார்.

# 130இற்கும் மேற்பட்டோரின் உயிரை பலியெடுத்த மைதானத்தை இடிக்க முடிவு



இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவா மாகாணம் மலாங் நகரிலுள்ள கஞ்சுருஹான் உதைபந்து மைதானத்தை இடிக்க அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த 1ஆம் திகதி நடைபெற்ற போட்டியின் போது மைதானத்தில் வன்முறை வெடித்தது. இந்த வன்முறை மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 130இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட கழகங்களின் அதிகாரிகள் 2 பேருக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டதாக இந்தோனேசிய உதைபந்து சம்மேளனம் அறிவித்தது.

இந்நிலையில், வன்முறை நடைபெற்ற உதைபந்து மைதானத்தை இடிக்க இந்தோனேசிய அரசு முடிவு செய்துள்ளது. மைதானம் இடிக்கப்பட்டு மீண்டும் முறையான வசதிகளுடன் கட்டப்படும் என்று அந்நாட்டு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிபா தலைவர் கியானி இன்பான்டினோவைச் சந்தித்த பின்னர் இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ தெரிவிக்கையில்,

மலாங்கிலுள்ள கஞ்சுருஹான் மைதானத்தை இடித்து, பிபா தரத்தின்படி நாங்கள் மீண்டும் அதை கட்டுவோம். வீரர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யக்கூடிய முறையான வசதிகளுடன் மைதானம் மீண்டும் கட்டப்படும் - என்றார்.

# அடுத்த சுற்றுக்கான இருப்பை தக்கவைத்த மே.இ.தீவுகள்



நடப்பு ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் குழு பி இல் இடம்பெற்றுள்ள சிம்பாப்வே – மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் 31 ஓட்டங்களினால் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி சுப்பர் 12 சுற்றுக்கு தகுதிபெறுவதற்கான வாய்ப்பை தக்கவைத்துக் கொண்டது. ஸ்கொட்லாந்து அணியுடன் தோல்வியை சந்தித்த இரு தடவைகள் சம்பியனான மேற்கிந்திய தீவுகள் அணி கட்டாய வெற்றியை நோக்கி நேற்று ஹொபாட்டில் சிம்பாப்வே அணியை எதிர்கொண்டது. முதலில் ஆடிய மே.இ.தீவுகள் அணி 7 விக்கெட் இழப்புக்கு 153 ஓட்டங்களை குவித்தது. பதிலெடுத்தாடிய சிம்பாப்வே அணி 18.2 ஓவர்களில் 122 ஓட்டங்களுக்கு சுருண்டுபோனது.

இந்த முடிவின் பிரகாரம் வெள்ளிக்கிழமை நடைபெறும் அயர்லாந்து – மேற்கிந்திய தீவுகள், ஸ்கொட்லாந்து – சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஆட்டங்களில் வெற்றிபெறும் இரு அணிகளும் அடுத்த சுற்றுக்கு தகுதிபெறும்.

# இலங்கை வரும் ஆப்கான் கிரிக்கெட் அணி



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இதற்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.


நவம்பர் 25ஆம் திகதிமுதல் 30ஆம் திகதிவரை 3 ஒருநாள் போட்டிகளும் கண்டி - பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையில் இதுவரை 4 ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுள்ளதுடன், இதில் 3 போட்டிகளில் இலங்கையும், ஒரு போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியும் வெற்றியைப் பதிவுசெய்துள்ளன. ஆப்கானிஸ்தான் அணி நவம்பர் 22ஆம் திகதி நாட்டை வந்தடையும்.

**போட்டி அட்டவணை**

| | |
|---|---|
| 1ஆவது ஒருநாள் போட்டி | – நவம்பர் 25 |
| 2ஆவது ஒருநாள் போட்டி | – நவம்பர் 27 |
| 3ஆவது ஒருநாள் போட்டி | – நவம்பர் 30 |

# எஜமானின் இறுதிக் கிரியையில் கண்ணீர் சிந்தி துன்புற்ற குரங்கு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தாழங்குடா பிரதேசத்தில் குரங்கொன்று எஜமான் உயிரிழந்ததையடுத்து அவரின் சடலத்தில் ஏறி அவரைக் கட்டியணைத்து அழுது புலம்பியதுடன், அவரின் இறுதிக்கிரியை நடந்த மயானத்திற்கு சென்று அவருக்கு அஞ்சலி செலுத்திய சம்பவம் நேற்று முன்தினம் (18) அனைவரையும் கண்கலங்க வைத்ததுடன், பெரும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது

தாழங்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான பீதாம்பரம் ராஜன், காட்டில் இருந்துவந்த குரங்கு ஒன்றிற்கு உணவு, பழங்களை வழங்கி வந்துள்ளார். குறித்த குரங்கு தினமும் அவரது வீட்டிற்கு வந்ததும் அவர் அதற்கு பிஸ்கட்களை வழங்குவதுடன், அவரின் வலதுகுறைந்த பிள்ளையை அறையிலிருந்து குரங்கு இழுத்துவந்து அந்த பிள்ளையுடன் பிஸ்கட் சாப்பிடுவது வழக்கம்.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை (17) இரவு சுகயீனம் காரணமாக அவர் திடீரென உயிரிழந்துதையடுத்து, அவரின் வீட்டில் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை செய்வதற்கு உறவினர்கள் சடலத்தை வைத்தியசாலையிலிருந்து கொண்டுவந்து வைத்தபோது அங்குவந்த குரங்கு, அவர் சடலமாக படுத்திருப்பதைப் பார்த்து அவரின் பக்கம் சென்று அவருக்கு மூச்சு உள்ளதா என சோதித்து அவரின் கழுத்துச் சட்டையை பிடித்திழுத்து பல முயற்சிகளை செய்தது.

ஆனால், அவர் படுக்கையிலிருந்து எழும்பாததையடுத்து குரங்கு கண்ணீர்விட்டு அழுததுடன், அவரின் காலை தொட்டு கும்பிட்டு அவரின் அருகில் தொடர்ந்து அமர்ந்தது.

அங்கு இறுதிக்கிரியையில் கலந்துகொள்ள வந்த உறவினர்கள் குரங்கின் செயலைக் கண்டு கண்ணீர்விட்டு அழுததுடன், குரங்கு அருகில் இருந்து செயற்பட்ட காட்சிகளை பார்த்து அனைவரும் ஆச்சரியமடைந்தனர்.

# படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 22ஆவது நினைவுதினம்

## மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு





(வெல்லாவெளி நிருபர்)

படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 22ஆவது ஆண்டு நினைவு தினத்தில் அஞ்சலி மரியாதை செலுத்தப்பட்டது.

படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 22ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று (19) காலை 10 மணியளவில் காந்தி பூங்காவிலுள்ள நினைவுத்தூபியில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நிகழ்வுக்கு வருகைதந்த மதப் பெரியார்கள், அரசியல்வாதிகளினால் மலர் அஞ்சலி, ஈகைச்சுடரேற்றல், அக வணக்கம் செலுத்தப்பட்டு, நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இவர் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 அன்று இலங்கை இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் வைத்து ஆயுததாரி ஒருவரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார். போர்ச்சூழல் நிலவும் யாழ்ப்பாணத்திலிருந்து நிமலராஜன் பி.பி.சியின் தமிழ் மற்றும் சிங்கள சேவைகளும், வீரகேசரி நாளேடு, ராவய நாளேடு போன்ற செய்தி நிறுவனங்களுக்கு நடுநிலையான செய்திகளை எழுதிவந்தார்.

குறிப்பாக, செம்மணி படுகொலை தொடர்பாக முழுமையான அறிக்கையை நிமலராஜன் ஊடகங்களில் வெளியிட்டார். கொலையாளிகள் அவரை யன்னல் வழியாகவே சுட்டார்கள். நிமலராஜன் தான் எழுதிக்கொண்டிருந்த கட்டுரை மேலேயே தனது உயிரை விட்டார். இவரின் கொலையானது தேசிய ரீதியில் மாத்திரமல்ல, சர்வதேச ரீதியிலும் பாரிய அதிருப்தி காரணமாக ஒலித்தது.

இந்த நினைவு தினத்தில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், மதப் பெரியார்கள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் வாதிகள் கலந்துகொண்டார்கள்.


இந்நினைவுதினம் மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் போன்ற ஊடக அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இலங்கையில் இதுவரையும் 46 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். 36 தமிழ் ஊடகவியலாளர்களும், 8 சிங்கள ஊடகவியலாளர்களும், 2 முஸ்லிம் ஊடகவியலாளர்களும் அடங்கலாக இவ்வாறு படுகொலை செய்யப்பட்டு ஜனநாயகம் மீறப்பட்டு சர்வாதிகார ஆட்சிக்கும் வித்திட்டுள்ளது.

நாட்டில் படுகொலைசெய்யப்பட்ட 46 ஊடகவியலாளர்களுக்கும் நீதி கிடைப்பதற்கு தீர்க்கமான விசாரணைகளோ, சட்ட நடவடிக்கைகளோ முன்னெடுக்கப்படாமல் இருப்பதை வலியுறுத்தியும், படுகொலை செய்த குண்டர்களை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்குமே குறித்த நினைவுதினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ்வாறான கொலையாளிகளுக்கு இறைவனின் தண்டனை கிடைப்பதற்கும் பிரார்த்தனை செய்யப்பட்டது.

# திருமலை மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸுடன் சந்திப்பு




(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று (19) அவரது அமைச்சில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தலைமையில் சந்தித்து விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது மீனவர்களின் பக்க நியாயங்களை ஏற்றுக்கொண்ட அமைச்சர், அதிகாரிகளுடன் கலந்துரையாடி விரைவில் சாதகமான முடிவினை அறிவிப்பதாக கூறினார்.

மேலும், திருகோணமலை மாவட்ட மீனவர்களுடன் கலந்துரையாடலொன்றை ஏற்பாடு செய்யுமாறும் அமைச்சர் குறித்த நாடாளுமன்ற உறுப்பினரிடம் வேண்டிக்கொண்டதுடன், அதில் தானும் கலந்துகொள்வதாகவும் கூறினார்.

இச்சந்திப்பில் கிண்ணியா மீனவர் மகா சங்க தலைவர் ஏக்கூப் பாயிஸ், பிரதேச மீனவர் சங்க பிரதிநிதிகள் பைரூஸ், ரமீல், நிபாஸ், லசந்த ஆகியோருடன் பிரத்தியேக செயலாளர் சதாத் கரீம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற வாழைச்சேனை மீனவர்கள் ஒரு மாதம் கடந்தும் கரைசேரவில்லை!

(மீராவோடை நிருபர்)


மீன்பிடிக்க ஆழ்கடலுக்குச் சென்ற வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் இதுவரை வீடு திரும்பவில்லை என்று துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து கடந்த செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி மீன்பிடிக்க ஆழ்கடலுக்குச் சென்ற தந்தை, மகன், மருமகன் உட்பட நான்கு மீனவர்களுமே இவ்வாறு காணாமல்போயுள்ளதாக மீனவர்களின் உறவினர்கள் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஏழு நாட்கள் பயணம்செய்து மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களும் 32 நாட்கள் கடந்தும் இதுவரைக்கும் வீடு திரும்பவில்லை என்று துறைமுக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இவ்வாறு காணாமல்போயுள்ள மீனவர்களை தேடும் பணிகளை கடற்படையினர் மற்றும் மீனவர்கள் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் உணவுக் குழாய் சத்திரசிகிச்சை வெற்றி




(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் மற்றுமொரு சாதனை மைல்கல் பதிவு செய்யப்பட்டுள்ளது. Hellers Cardiomyotomy சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நேற்று முன்தினம் (18) நடத்தி முடிக்கப்பட்டது.

இது உணவுக் குழாய் களம் (Esophagus) காணப்படும் தசைகளில் ஏற்படும் சுருக்கம் காரணமாக ஏற்படும் நோய் நிலைமையாகும். இந்நோய் (Achalasia Cardia) நிலைமை காரணமாக நோயாளி உணவு விழுங்குவது தடைப்படும். இச்சத்திர சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் றிப்ஷான் ஜெமீல் குழுவினர் மற்றும் மயக்க மருந்து நிபுணர் டாக்டர் ஜே.குலறிஸ்ஸ குழுவினர்களுக்கு நன்றி கூறுவதுடன், மேற்படி வைத்திய நிபுணர்களின் சேவையைப் பெற்று நன்மையடையுமாறு கிழக்கு கரையோர பிராந்திய மக்களை வைத்திய அத்தியட்சகர் ரொஷான் போல் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறான சத்திர இப்பிராந்தியத்தில் உள்ள மக்கள் மட்டக்களப்பு மற்றும் கொழும்பு போன்ற பிரதான நகரங்களில் காலம் தாழ்த்தி செய்யப்பட்ட இச்சிகிச்சை இங்கு நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மருதமுனையின் முதலாவது பட்டயக் கணக்காளர் தெரிவு



மருதமுனை மண்ணின் முதலாவது பட்டயக் கணக்காளர் என்ற பெருமையை அல்-ஹாபிழ் அபூ உபைதா முஹம்மது ஹஸ்ஸான் பெற்றுக்கொண்டார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இலங்கை பட்டையக் கணக்காளர் நிறுவனத்தினால் (ICASL) நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் இந்த பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

அஷ்-ஷெய்ஹ் A. Abooubaitha (B.A) (Madani) - மர்ஹூமா ஹாஜியானி I.L. ஹமீதா ஆகியோரின் மூத்த புதல்வரான எமது மருதமுனை மண்ணின் மைந்தன் அல்-ஹாபிழ் அபூ உபைதா முஹம்மது ஹஸ்ஸான் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!




***தமிழ் மக்களிட பிரச்சினய ஆராய அமைச்சவை உபகுழு ஒண்ட ரணில் ராஜபக்ஷ அமைச்சிருக்கிறாராம் எலுவா?***

***இந்த கதய கேட்டு காது புளிச்சிப்போய்த்து.***

***அடே உங்கட நாட்டில உங்கட சிங்களத் தலைவர்கள் 1948இலிருந்து 2022 வரையும் தமிழரிட பிரச்சினய ஆராய எத்தன குழு? எத்தன ஒப்பந்தம்? எத்தன சந்திப்பு? எத்தன பேச்சு? எத்தன பேய்காட்டல்? என்று பட்டியல் இந்த கிழட்டு நரிக்கு தெரியாதா..? இப்ப சர்வதேசத்த ஏமாத்த இது ஒரு கூத்து. ஆர பேய்காட்டிறயலிடா நாசமறுவானுகளே..!***

# கண்ணகையம்மன் ஆலய வீதிகளைப் பார்வையிட்டார் மட்டு. மாநகர முதல்வர்



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட தாண்டவன்வெளி கண்ணகையம்மன் கோவில் மழை பெய்யும் காலங்களில் மழை நீர் வடிந்தோட முடியாமல் அப்பகுதியிலேயே தேங்கி நிற்பதனால், அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்துவருவதாக முறையிடப் பட்டிருந்தது.

இதனை நேரடியாக அவதானிக்கும் பொருட்டு மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ச.இராஜகுமார் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுடன் நேற்று முன்தினம் (18) களவிஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.



இதன்போது முன்னாள்மாவட்ட அரசாங்க அதிபரும், மாநகர ஆணையாளருமான மா.உதயகுமார், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் இணைந்துகொண்டனர்.

இதனைப் பார்வையிட்ட மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது,



மேற்படி வடிகான் அமைப்புப் பணிகளுக்காக பொதுமக்கள் தமது காணியின் சிறு பகுதியை விட்டுக்கொடுக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டோருடன் பேசி முடிவுகள் எடுக்கப்படும். அது நிறைவேறும் பட்சத்தில் வடிகான் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் - என்றார்.

# திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுவந்த மூவர் கைது


(திகாமடுல்ல நிருபர்)

மட்டக்களப்பு, கல்லடி, ஆரையம்பதி போன்ற பிரதேசங்களில் பாரிய திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுவந்த மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், திருடிய மோட்டார்சைக்கிள்கள், சமையல் எரிவாயு சிலிண்டர், போத்தல்கள், தங்க நகை என்பனவும் மீட்க்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் நேற்று முன்தினம் (18) தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் வவுணதீவு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் காத்தான்குடி பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

மட்டக்களப்பு, கல்லடி மற்றும் ஆரையம்பதி பிரதேசங்களில் வீடுகள் உடைக்கப்பட்டு, திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் ஆலோசனையின்பேரில் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ரஹீம் தலைமையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் இந்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள், ஒரு தங்க சங்கிலி, ஒரு சைக்கிள், சமையல் எரிவாயு சிலிண்டர் மூன்று என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபர் தேடப்பட்டு வருவதாகவும் காத்தான்குடி பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் திருடப்பட்ட பொருட்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பயங்கரவாதம் முழுமையான தீய சக்தி; எக்காரணத்தாலும் நியாயப்படுத்த முடியாது

## மும்பைத் தாக்குதலில் உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்திய ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டனியோ குட்டேரஸ் கருத்து



(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

''பயங்கரவாதம் முழுமையான தீய சக்தி. எந்தக் காரணங்களும், சாக்குப்போக்கும், குறைகளும் ஒருபோதும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்தாது.'' - இவ்வாறு ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டனியோ குட்டேரஸ் தெரிவித்துள்ளார்.

மூன்று நாட்கள் விஜயமாக இந்தியாவுக்கு வந்துள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டனியோ குட்டேரஸ், நேற்று மும்பை தாஜ் ஹோட்டலில் 2008ஆம் ஆண்டு மும்பை பயங்கரவாதத் தாக்குதலில் உயிர்நீத்தவர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இதுகுறித்து ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

''பயங்கரவாதம் முழுமையான தீய சக்தி. எந்தக் காரணங்களும், சாக்குப்போக்கும், குறைகளும் ஒருபோதும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்தாது. இன்றைய உலகில் பயங்கரவாதத்திற்கு இடமில்லை. 166 பேரின் உயிரை வாங்கிய மிகவும் கொடூரமான பயங்கரவாதச் செயல் நடைபெற்ற இங்கு, நான் மிகவும் ஆழ்ந்த உணர்வுடன் உணர்கிறேன்.

பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நான் அஞ்சலி செலுத்துகிறேன். அவர்கள் இந்த உலகத்தின் வீரர்கள். மும்பைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் இந்தியர்கள், உலகின் பிற பகுதிகளைச் சேர்ந்த குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடுவது உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் முக்கியமாகும். பயங்கரவாதத்திற்கு எதிராக போரிடுவது ஐ.நா. சபையின் மைய நோக்கம்'' - என்றார்.

## உலக செய்திகள்

# நேரு குடும்பத்திடமிருந்து கைநழுவிய காங்கிரஸ் ஆட்சி

## காங்கிரஸின் தலைவராகிறார் மல்லிகார்ஜுன கார்கே



அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் தேர்தலில் மல்லிகார்ஜுன கார்கே வெற்றிபெற்றார்.

இதன்மூலம் கடந்த 24 ஆண்டுகளில் முதன்முறையாக நேரு குடும்பத்தைச் சாராத ஒருவர் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக மல்லிகார்ஜுன கார்கே தெரிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவருக்கான தேர்தல் கடந்த ஒக்டோபர் 17ஆம் திகதி நடைபெற்றது. இதில், மல்லிகார்ஜுன கார்கே மற்றும் சசிதரூர் ஆகியோர் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டனர். இந்தியா முழுவதுமுள்ள கட்சியின் மூத்த நிர்வாகிகள் வாக்களித்த நிலையில், பதிவான வாக்கு எண்ணும் பணிகள் நேற்று நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதில், மல்லிகார்ஜுன கார்கே 7,897 வாக்குகள் பெற்று அபார வெற்றிபெற்றுள்ளார். சசிதரூர் சுமார் 1,000 வாக்குகள் பெற்று தோல்வியைத் தழுவிய நிலையில், 416 வாக்குகள் செல்லாதவை என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவராக மல்லிகார்ஜுன கார்கே தெரிவாகியுள்ளார்.

## கட்டவிழக்கப்படும் மர்ம முடிச்சுகள்; திருப்பம் காணும் 'ஜெ' மரண விசாரணை

# விசாரணைக்கு நான் ரெடி: சின்னம்மா சசி அதிரடி



தன் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித விசாரணை நடத்தினாலும் அதை சந்திக்கத் தயாராகவுள்ளதாக சசிகலா தெரிவித்துள்ளார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா இறப்பு குறித்த விசாரணை ஆணையத்தின் அறிக்கையில் சசிகலாவை விசாரிக்க வேண்டுமென ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், சசிகலா விடுத்துள்ள அறிக்கையில், விசாரணை ஆணையம் தனது அதிகார வரம்பை மீறி தேவையற்ற அனுமானங்களை சொல்லி பழி போட்டுள்ளதாகக் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் மருத்துவ சிகிச்சையில் தான் தலையிடவில்லை எனவும், வெளிநாட்டிற்கு சிகிச்சைக்கு கொண்டு செல்வதைத் தடுக்கவில்லை என்றும் தனது அறிக்கையில் சசிகலா தெரிவித்துள்ளார்.

# ''அப்பலோவில் சிசிரிவியை ஓவ் பண்ண சொன்னது இவர்கள்தான்''




மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது 27 சிசிரிவி கெமிராக்கள் அணைக்கப்பட்டதாகவும், பல கெமராக்கள் அகற்றப்பட்டதாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், அப்போதைய சுகாதாரத்துறை செயலர் இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலர் இராமமோகன் ராவ் ஆகியோரின் உத்தரவின்படியே மேற்படி சிசிரிவி கெமிராக்கள் அணைக்கப்பட்டதும், அகற்றப்பட்டதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஆறுமுகசாமி ஆணையம் கருத்து தெரிவித்துள்ளது.

# ''என்னுடைய சொக்லெட்டை அம்மா திருடிவிட்டார்; அவரை கைதுசெய்யுங்கள்''



''அம்மா என்னுடைய சொக்லெட்டை திருடி விட்டார். அதனால் அவரை கைது செய்யுங்கள்...'' என மழலை மொழியில் 3 வயதுச் சிறுவனொருவன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து மத்திய பிரதேச உள்துறை அமைச்சர் சிறுவனுக்கு சொக்லெட் மற்றும் சைக்கிள் தருவதாக உறுதியளித்துள்ளார்.

மத்திய பிரதேசத்திலுள்ள Burhanpur பகுதியில் Dedhtalai கிராமத்தைச் சேர்ந்த 3 வயதுச் சிறுவன் Hamza. இவர் தான் வசிக்கும் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு சென்று அங்கிருந்த பொலிஸ் ஆய்வாளரிடம் தாய் மீது முறைப்பாடளித்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் தன்னுடைய சொக்லெட்டை தாய் திருடிவிட்டதாகவும் அதனால் அவரை கைதுசெய்யும்படியும் மழலை மொழியில் தெரிவித்துள்ளான். சிறுவனது இந்த புகார் சமூகவலைத்தளங்களில் வைரலானதையடுத்து அந்தப் புகாருக்கு மாநில உள்துறை அமைச்சர் பதிலளித்துள்ளார்.

# சுவீடனில் காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராக 26 வயது இளம்பெண் நியமனம்



சுவீடனில் 26 வயதுடைய ரோமினா பூர்மோக்தாரி என்ற இளம்பெண் காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக பொறுப்பேற்ற பிரதமர் உல்ஃப் கிறிஸ்டெர்ஸன் தலைமையிலான அமைச்சரவையில் ஈரான் வம்சாவளியைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலரான ரோமினா பூர்மோக்தாரி காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இவர் அமைச்சராக நியமிக்கப்பட்டதன் மூலம் சுவீடனின் 27 வயது இளம் அமைச்சர் என்ற இதற்கு முந்தைய அமைச்சர் ஒருவரின் சாதனையை முறியடித்துள்ளார்.



## கட்டுப்பாடற்ற உணவால் மோசம் அடைந்த உடல்நிலை

- சிகிச்சையின் போது கட்டுப்பாடற்ற உணவால் வேகமாக மோசம் அடைந்த ஜெயலலிதாவின் உடல்நிலை
- மருத்துவமனையில் ஜெயலலிதாவிற்கு பரிந்துரைக்கப்பட்ட உணவுகட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளது.



- மருத்துவமனையில் ஜெயலலிதாவிற்கு உயர்தர சாக்லேட் நிற ஐஸ் கிரீம்கள், அரிசி உணவு, இட்லி வெண் பொங்கல், தக்காளி சாதம் நிறைய கேக் மற்றும் இனிப்பு வகைகள் வழங்கப்பட்டுள்ளது.
- பொட்டாசியம் மற்றும் சர்க்கரை உணவுகள் அவரது உடல்நிலை காரணமாக கட்டுப்படுத்த வேண்டி இருந்தாலும், அவருக்கு எவ்வித கட்டுப்பாடு இன்றி உணவுகள் வழங்கப்பட்டன.
- சிகிச்சையின் போது உணவு ஊட்டச்சத்து நிபுணர்களால் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்காமல் உணவு வழங்கப்பட்டதால் அவருடைய உடல்நிலை வேகமாக மோசம் அடைந்தது.

- ஆறுமுகசாமி ஆணையம்

## கேரளா நரபலி விவகாரம்; விசாரணையில் வெளிவரும் அதிர்ச்சித் தகவல்கள்

# உடலை கத்தியால் கீறி மசாலா தடவி ரசித்த கொடூரம்



கேரளாவில் நரபலி கொடுக்கப்பட்ட பெண்ணின் உடலை முகமது ஷாபி, பகவல் சிங், லைலா ஆகியோர் கத்தியால் கீறி கறி மசாலா தடவி அவர்கள் துடிப்பதைப் பார்த்து ரசித்த கொடூர தகவல் விசாரணையில் தெரிந்துள்ளது.

கேரள மாநிலம், பத்தனம்திட்டாவில் தர்மபுரியை சேர்ந்த பத்மா, கேரளாவைச் சேர்ந்த ரோஸ்லி நரபலி கொடுக்கப்பட்ட வழக்கில் கைதான பகவல் சிங், லைலா, ஷாபி ஆகியோர் பொலிஸ் காவலில் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இதில், நாளுக்கு நாள் அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

நரபலி கொடுக்கப்பட்ட பெண்ணொருவரின் உடல் முழுவதும் 3 பேரும் சேர்ந்து கத்தியால் கீறி, காயங்களில் கறி மசாலா தடவியுள்ளனர். அப்போது, அந்தப் பெண் வேதனையில் அலறித் துடிப்பதைப் பார்த்து அவர்கள் ரசித்துள்ளனர். அப்படி துடிக்கத் துடிக்க இறந்தால்தான் நரபலியின் புண்ணியம் அதிகமாக கிடைக்கும் என்று ஷாபி தங்களிடம் கூறியதாக பகவல் சிங்கும், லைலாவும் விசாரணையில் தெரிவித்துள்ளனர். பகவல் சிங், லைலாவின் சொத்துகளை அபகரிக்கவும் ஷாபி திட்டமிட்டிருந்தது விசாரணையில் தெரிந்துள்ளது.

ஏற்கனவே, ஸ்ரீதேவி என்ற பெயரில் போலி பேஸ்புக் கணக்கை தொடங்கிதான் பகவல் சிங்கை ஷாபி ஏமாற்றினார். அதேபோல், வேறொரு போலி பேஸ்புக் கணக்கை தொடங்கி நரபலி கொடுக்கப்பட்ட சம்பவத்தைக் கூறி மிரட்டி 2 பேரின் சொத்துகளையும் பறிக்க ஷாபி திட்டம் தீட்டியிருந்தாராம். இதற்கிடையே ஷாபி, பகவல் சிங் ஆகியோர் மீது இரட்டை கொலை வழக்குடன், பலாத்காரம், நகை பறிப்பு வழக்கையும் பதிவு செய்வது குறித்து பொலிஸார் ஆலோசித்து வருகின்றனர். 2 பேருக்கும் நேற்றுமுன்தினம் எர்ணாகுளம் மருத்துவமனையில் ஆண்மை பரிசோதனை நடத்தப்பட்டது.

**மேலும் ஒரு பெண் நரபலி?**

ஆலப்புழா அருகேயுள்ள கடக்கரப்பள்ளி என்ற பகுதியைச் சேர்ந்த பிந்து பத்மநாபன் (வயது 51) என்ற பெண் சில வருடங்களுக்கு முன் காணாமல்போனார். இந்த வழக்கை விசாரித்துவரும் ஆலப்புழா பொலிஸாருக்கு, இந்த பெண்ணையும் ஷாபி நரபலி கொடுத்திருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டு, ஷாபியிடம் விசாரித்தனர். இதில் கிடைத்த தகவல்களை அவர்கள் வெளியிடவில்லை.

# தடையை மீறி உண்ணாவிரதம்: பழனிசாமி உட்பட 62 பேர் கைது



சட்டசபையில் பேச அனுமதிக்காததைக் கண்டித்து, அ.தி.மு.க., - எம்.எல்.ஏக்கள், நேற்று (19) ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்த நிலையில், பொலிஸார் அனுமதி மறுத்திருந்தனர். தடையை மீறி கறுப்புச் சட்டை அணிந்து உண்ணாவிரதம் இருக்க முயன்ற பழனிசாமி உள்ளிட்ட ஆதரவு எம்எல்ஏக்கள் 62 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அ.தி.மு.க., இடைக்கால பொதுச் செயலராக தெரிவான பழனிசாமி, சட்டசபை எதிர்க்கட்சி துணைத் தலைவர் பன்னீர்செல்வத்துக்குப் பதிலாக முன்னாள் அமைச்சர் உதயகுமாரை நியமிக்கும்படி சபாநாயகரிடம் கடிதம் கொடுத்தார். அவர் ஏற்கவில்லை. இதைக் கண்டித்து, சட்டசபையில் நேற்றுமுன்தினம் (18), கேள்விநேரத்தில் பேச முயன்றனர். சபாநாயகர் அனுமதி அளிக்காததால், அவரது இருக்கை முன் அமர்ந்து தர்ணா செய்தனர். இதனால் சபைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.

பேச அனுமதி மறுத்ததைக் கண்டித்து, சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே, நேற்றுக் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தலைமையில், அ.தி.மு.க., எம்.எல்.ஏக்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்போவதாக கட்சித் தலைமை அறிவித்தது. ஆனால், இந்த உண்ணாவிரதத்திற்கு பொலிஸார் அனுமதி மறுத்திருந்தனர். உண்ணாவிரதம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட இடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், தடையை மீறி பழனிசாமி உள்ளிட்ட 62 அ.தி.மு.க. எம்எல்ஏக்கள் கறுப்புச் சட்டை அணிந்து வள்ளுவர் கோட்டத்தில் உண்ணாவிரதம் இருக்க முயன்றனர். அப்போது பொலிஸார் அனுமதி மறுத்ததால், வீதியில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர். போராட்டத்தைக் கைவிட்டு கலையுமாறு பொலிஸார் அறிவுறுத்தியும் கலையாததால், பழனிசாமி உள்ளிட்ட 62 எம்எல்ஏக்களையும் பொலிஸார் கைதுசெய்து பஸ்ஸில் ஏற்றினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# பூமிக்கருகில் 30 ஆயிரம் சிறுகோள்கள் கண்டுபிடிப்பு



சூரியனைச் சுற்றிவரும் பூமியின் சுற்றுவட்ட பாதைக்கு மிக அருகில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பூமிக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் சிறுகோள் ஈரோஸ் 1898இல் பேர்லின் அறிஞர்களால் கண்டறியப்பட்டது.

இந்த சிறுகோள்கள் சூரிய குடும்பம் உருவானபோது எஞ்சிய பாறைத் துண்டுகள். கடந்த பத்தாண்டுகளில்தான் ஆயிரக்கணக்கான கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7